# ஜகன்மோகினி

489



6 MAR 1945

அ 4 ணா

March 1945

JC
183099

"JAGANMOHINI" SINGAPERUMALKOIL.

## வயது சென்ற காலத்திற்காக






## ரூ.1000க்கு

## ரூ.1500.

பனிரெண்டு வருஷங்களில் போட்ட முதலில், 50 சதவிகித உயர்வு.
நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளில் நீங்கள் பூரண பாதுகாப்
புடன ரூ. 10 முதல் ரூ. 5,000 வரையில் போட்டுவைக்கலாம.

## வருமான வரி கிடையாது.

# நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்ஸ்

அவைகளை சர்க்காரால் நியமிக்கப் பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளிடமோ, அல்லது சேவிங்ஸ் பீரோ அல்லது தபா லாபீஸ்களிலோ வாங்குங்கள்

AAA1234 TM

# ஜகன் மோகினி

தனிப்பிரதி அணா 4
வருட சந்தா ரூ. 3
ஜீவிய சந்தா ரூ. 50


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Vol. 22. No. 3. தாரண மாசி March 1945.



1945
183099


மேல் அட்டைப்படம்! மாத்ரு தேவோ பவது !

## தாய் வணக்கம்

ராகம்—சாவேரி தாளம்—சாபு

போற்றி போற்றி பராசக்தி தாயே
புதல்வர் செய்திடும் பூசனை கொள்வாய்
ஆற்றலும் அறிவுந் திரு ஓங்கும்
ஆத்ம சக்தியும் ஆயுளும் ஈவாய் — (போ)

அன்னை ஓம் சக்தி என்கிற போதே
அமுதம் ஊறுமெம் ஆவியி னுள்ளே.
மின்னைப் போலஉன் அன்புமின் ஸாரம்
வெற்றிவீறு விளைத்திடுந் தாயே — (போ)

சிங்க நெஞ்சும், சிலையெனத் தோளும்,
தீரவீர பராக்ரம வாழ்வும்,
தங்க மேனியும் சத்திய வாக்கும்,
தரும சித்தியும் தந்தெமை யாளாய். —(போ)

எங்கு நோக்கினும் உன்முகங் காணும்
இன்பம் வேண்டும்; இதயத்தில் ஊறும்
பொங்கும் ஆனந்தப் புன்னகைத் தேனே!
பூங்கை ஆசி பொழிந்தெமைக் காவாய்! (போற்றி)

சுத்தானந்த பாரதி



செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம்- அவன்
எங்கள் அறிவு விளக்கமுறச் செய்திடுகவே ! -பாரதி.

அறிவிலே ஒளிவீச வேண்டுமென்று சூரியதேவனை நோக்கிச் செய்யும் பிரார்த்தனை இது. சூரியதேவன் என்றால், சூரியனுக்கும் தேவன் ; அதிதேவதை. இந்த அதிதேவதைதான் சூரிய நாராயணமூர்த்தியாகிய விஷ்ணு என்பர் வைஷ்ணவர். 'உயர் காயத்திரிக்கு ஒண்பொருளாவது' சிவபெருமான் என்பர் சைவர். இந்தக் காயத்திரியின் அதிதேவதை தேவிதான், மாதாவாகிய பராசக்திதான் என்பர் தேவி உபாஸகர். உண்மையில் பல தேவதைகளுக்கும் ஏகபிரதிநிதியாகிய பரதேவதை என்ற ஒரே ஸ்வரூபத்தில் காட்சி தருவது காயத்திரி. இதனால்தான் காயத்திரி உபாஸனை செய்யவேண்டுமென்பது நித்ய நியமம்.

—பி. ஸ்ரீ.

# ஆசாரம் எதற்கு?

நமது சாஸ்திரங்களையும் வேதங்களையும் செய்தவர்கள் தீர்க்கதரிசிகளான அருட்கவிகளாவார்கள், வேதம், வேதாங்கம், உபவேதங்கள், அறுபத்துநான்கு கலைகள் புராணங்கள் எல்லாம் அக்கவிகள் உள்ளே அனுபவித்து உரையால் தீட்டிய பொன்மொழிகளேயாம், ஹீராக் குகையில் நீண்டகாலம் தியானம் செய்து அருள்பெற்றே முஸ்தபா முஹம்மது ஸல்லம் திருக்குரான் அருளினர்.

முப்பதாண்டளவும் ஆண்டவனைத் தியானம் செய்து, ஞானஒளிபெற்றே ஏசுகிறிஸ்துநாதர் புதிய பைபிளை அருளினர். வைராக்கியமாகத் தியானம் செய்தே புத்த பகவான் அஷ்டசீலங்களைக் கொண்ட தம்ம பாதத்தை அருளினர். நீண்ட தியானசாதனத்தால் சிவமயசித்திபெற்றே மெய்கண்டார் சிவஞானபோதம் விளக்கினர்; திருமூலர் திருமந்திரம் அருளினர்; மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர், காரைக்காலம்மையார் முதலியோர் அருட்பாடல்களை அருளினர். திருப்புளியடியில் 'அத்தைத்தின்று ஆங்கேயிருக்கும்' ததேகத்யானம் செய்தே நம்மாழ்வார் சாமவேதத்தைத் திருவாய்மொழியாக அருளினர். கடவுட் காதலில் கரைந்துருகி அருள்பெற்ற ஆண்டாளே திருப்பாவை யருளினள். ஆசாரசீலத்தால் பக்திப்பரவசத்தால், பரமபிரபன்னரும் மகா தயாளருமான ஸ்ரீமத் ராமாநுஜர் பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் அருளினர்; தமது சிஷ்டாசாரங்களாலேயே உலகெல்லாம் ஒருகுலமாக வாழக்கூடிய நியமங்களைக் காட்டிச்சென்றார். ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகர், இல்லறத்தில் இருந்துகொண்டே சாயுஜ்யம் அடையும் பிரபத்தி மார்க்கத்தைத் தமது ஒப்புயர்வற்ற வாழ்க்கையினால் உலகிற்குக் காட்டி தோத்திரங்கள், காவ்யங்கள், நாடகங்கள் வேதாந்த க்ரந்தங்கள், வியாக்யான க்ரந்தங்கள், அனுஷ்டான க்ரந்தங்கள், ரஹஸ்யக்ரந்தங்கள், தமிழ்ப் பிரபந்தங்கள் பலஅருளி, ஸர்வதந்த்ர ஸ்வதந்தரராக விளங்கினர். இவர் தமிழில் அருளிய இருபத்து நான்கு கிரந்தங்களும் தேசிகப்பிரபந்தம் என்ற பெயரால் வழங்குகின்றன. அவை வைஷ்ணவாசாரங்களைத் தெளிவாகக் காட்டி, மனிதனைப் பிரபத்தி மார்க்கத்தில் இட்டுச்செல்லும் அகண்ட தீபம்போல நிலவுகின்றன. ஸ்ரீமந்நாதமுனிகள், பிள்ளைலோகாசாரியார் ஆளவந்தார் முதலிய பக்தர்களும் சிறந்த ஆசாரசீலர்களாய், உலகிற்கு நல்வழி காட்டினார்கள். சிகாகோவில் சுவாமி விவேகானந்தர் வேதாந்த கர்ஜனை செய்த அதே மேடையில், பிள்ளைலோகாசாரியாரின் தத்வரகசியமும் பிரபத்தி மார்க்கமும் முழங்கின. 'கிறிஸ்து ஜரதுஷ்ட்ர சமயங்களுக்கு இந்தப் பிரபத்திமார்க்கம்பொருத்தமாயிருக்கிறதே' என்றொரு வெண்ணறிஞர் மெச்சினர்...

மேற்சொன்ன மகான்கள் அனைவரும் கலைவள்ளல்கள். அபர வித்தையாலன்று; உள்முகப்பட்டெழுந்த பர வித்தையினால் அவர்களுடைய ஞானம் மலர்ந்தது; அந்த மலர்மணம் பல கிரந்தங்களாக நமக்குக் கிடைத்துள்ளது. இப்பெரியார்

களின் உபதேசங்கள் பல மதசம்ப்ர தாயங்களாகத் தோன்றினலும், அடிப்படையில் எல்லார் உள்ளமும் ஒன்றே. இவர்கள் அனைவரும் பரமாசாரியர்களே. இவர்களுள் எவர் உபதேசங்களை உண்மையாகக் கடைப்பிடித்து, (பிறரைவெறுக்காமல் சமசித்தத்துடன்) நடந்தாலும், மனிதன் அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கு புருஷார்த்தங்களையும் பெறலாம். ஒப்புயர் வற்ற பரமாத்மன் ஒருவன். அவன் உயிர்க்குயிராக எங்கும் நிறைந்தவன். அவன் முற்றறிஞன்; மனிதன் சிற்றறிவன். மனிதன் எவ்வளவு பெரியவனுனுலும் இறைவனுக்குச் சமானமாக முடியாது. இறைவன் ஜீவசக்தியாக தேகியாக உடலில் இருப்பதனுலேதான், மனிதன் மனிதனுயிருக்கிருன். அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆதலால் சிற்றறி மனிதன், பரமாத்மனைச் சரண் புகுந்து, அவன் மயமாக அனைத்தையும் பார்த்து, அவன் கைங்கரியமாக உலகாலயப்பணிகளைச் செய்வதே அவனருளை அடையும் வழியாகும். உடல், மனம், உள்ளம், சுத்தான்மா ஆகிய நான்கு தத்துவங்கள் மனிதனிடம் உள்ளன. இத்தத்துவங்கள் பூரணவிகாசம் பெற்றுலே மனிதன் இன்புறமுடியும். மனிதன் ஐம்புலன்களாலும் மனதாலும் அடையும்இன்பம் சிற்றின்பம்; அது தோன்றி மறையும் அநித்திய சுகம். மனிதன் உயிர்க்குயிரான இறைவனுடன் கூடிப் பெறும் இன்பமே பேரின்பம். அந்த இன்பத்தை அடைய எல்லாருக்கும் உரிமையுண்டு. அதற்கு வழி சித்த சுத்தி, பந்தமற்ற மனே சுதந்தரம், சுகதுக்கங்களை நிகரெனத்தாங்கி இருவிகாரமற்ற சமநோக்கம், ஆகிய மூன்றும் சாதனங்களாம்.

இச்சாதனங்கள் நிறைவேற ஆண்பெண் இருபாலாரும் சில ஆசாரங்களை அனுஷ்டிக்க வேண்டும். உடல்நலனுக்காக ஆகாரசுத்தம், வாயுசுத்தம், பேச்சுவார்த்தைகளில் மிதம், பிரமசரியம், ஏகபத்தினி விரதம், மந்த்ரஜபம், தியானம் ஆசார்ய சேவை, நல்ல நூல்களைக் கற்று கேட்டுச் சிந்தித்து நிற்றல் சமசித்தம், ஜீவசேவை – ஆகியவை, எல்லாச்சமயநெறிகளுக்கும் பொதுவான சாதனங்களாம். இறைவனை ஒப்பாத பௌத்த சமண சமயங்களும், அந்தராத்மனை ஒப்பும், ஆத்ம சித்திக்கு வேண்டிய யமநியம தர்மாசர்யங்களையும் அஷ்டசீலங்களையும் போற்றும், எந்தச்சமயமும் கொலை, புலை, கள், கற்பழிவு, கோபதாபம், சூதாட்டம், அனுசாரம் அசுத்த உணவுகள், வீண் வம்புகள் இவற்றை அனுமதிப்பதில்லை. எல்லா மதங்களும் சுத்தமாயிரு, சுத்தனுகப்பேசு, சுத்தனுகநினை என்றே வற்புறுத்தும். இந்த ஆசாரங்களைப் போற்றும் மகான்களே உலகிற் சிறந்த மகாகவிகளாக விளங்கினுர்கள். மில்தன், ஷேக்ஸ்பியர் இருவரும் சிறந்த கிறிஸ்துபக்தர்கள். கண் போன பிறகும் 'இறைவா! உன்னுெளியால் என்னையும் உலகையும் காண்கிறேன்' என்கிருன் மில்தன். வால்மீகி பல்லாண்டுகளாக ஸ்ரீராமஜபம் செய்து, சித்தி பெற்ற மகாகவி. கம்பன் அதேமாதிரி ஸ்ரீ ராமதாரகமந்திரத்தில் ஊறிய பரமபக்தன். துளஸிதாஸர் பக்தியே வடிவானவர். அவருடைய மகாகாவியம் முழுதும் ஸ்ரீ ராமமயந்தான். காளிதாஸன் மகாசிவபக்தன். தாகூர் தமது கவிதைகளையெல்லாம் அந்தராத்மனை இறைவனுக்கே அர்ப்பணித்திருக்கிருர். தியானத்தாலும் ஆகாரசுத்தியாலும், சித்தசுத்தி

பெற்ற மகான்களுக்கே அருட் கவிகள் உதிக்கும்.

ஆசாரநியமமில்லாமல் கண்டபடி திரிந்த கவிகள், எப்போதும் நோய் வாய்ப்பட்டு அல்பாயுளாக முடிந்ததையே நாம் காண்கிறோம். பிரான்ஸிஸ் தாம்ஸன் சிறந்த கவி. அபின் உண்டு உடல் மெலிந்து இறந்தான். அந்தப்பழக்கம் இல்லாதிருந்து புலமையைச் சரியாகப்பயன்படுத்தியிருந்தால், அவன் இன்றுலகிற்குக் கவிச்சக்கரவர்த்தியாக விளங்கியிருப்பான். சிறந்த பிரெஞ்சுக்கவியான வேர்லேன் மிதமிஞ்சிய குடியால் வறியனாகி, உடல்கெட்டு உளங்கெட்டு இறந்தான். ஷேக்ஸ்பியருக்கும் ஆவேசமளித்த மார்லோ, குடியினால் கொலைகூடச்செய்யத்துணிந்திறந்தான். சிலர் "எனது சமரஸக் கவியைப்பார்; தீண்டாதார் வீட்டில் கள்ளுண்பார் மொச்சைக்கொட்டையுண்பார்" என்று பேசுகிறார்கள். சுசி ருசி ஆசாரமற்ற தாமஸ உணவுகளை உண்பது சுத்த அனாசாரம். அது வரவர ஆளையும் அறிவையும் தேய்க்கும் என்பதை நாம் அறிய வேண்டும்.

ஒரு போலி—நவநாகரிகன் காலையெழுந்ததும் சரியாகப்பல்கூடத் தேய்க்காமல் காப்பியும் பிஸ்கோத்தும் ஜாமும் சாக்லேட்டும் உள்ளே தள்ளுகிறான். சுத்தாசுத்தம் பாராமல் விலையுணவுகளையும் புட்டிச் சரக்குகளையும் சாப்பிடுகிறான். சுருட்டும் பீடியும் புகைத்துத்தள்ளுகிறான். தன் வயிற்றை ஆடு மீன் கோழிகளின் சுடுகாடாக்கிக்கொள்ளுகிறான். சரியாகக் குளிப்பதுகிடையாது, சௌசவிதிகளைக் கேலிசெய்து, காகிதம் உபயோகிக்கிறான். எப்போதும் காற்று வெயிலே படாமல் சட்டையில் புதைந்துகிடக்கிறான். நிறைமுறையில்லாமல் விஷயசுகங்களில் அழிகிறான். இந்த அனாசார வாழ்வை அவன் சுதந்திரம் என்கிறான். சுசிருசி ஆசாரமில்லாத இந்த அசுத்த வாழ்வால் மலச்சிக்கல், தலைவலி, மார்வலி, பற்று, மேகம், நீரிழிவு முதலிய கொடிய நோய்கள் அவனைப்பற்றி அலைக்கின்றன. பெரிய செல்வர் நல்லபடிப்பாளர், மேடைச்சிங்கங்கள் பலர் இப்படித் தீராநோயால் வருந்தினர்கள். மகா சூரனாகிய நெப்போலியன் ஆகார சுத்தமில்லாமல் தீராமலச்சிக்கலால் வருந்தினான். வாடர்லூ யுத்தத்தில் அந்தநோய் அதிகமாய், லாகிரிதின்று அவன் உறங்கிவிட்டான். அதனால் போரே அவன் விதியைத் தீர்மானித்து ஹெலனைக் கைதியாக்கிவிட்டது. இறுதிமட்டும் அவன் குடல் நோயால் துடித்தான். மஹாகவி ஷெல்லி, புலனடக்காமல் திரிந்து, எப்போதும் நோய்ப்படுக்கையிலேயே தவித்துத் தனது காவியத்தை எழுதினான். வாழ்க்கையே அவனுக்குச் சாவின் விளையாட்டாகத் தோன்றியது.

* * * *

எல்லாருக்கும் நல்ல உணவு வேண்டும். கீதை தாமத உணவைக் கண்டிக்கிறது, சுத்தமான தெம்பான சத்துள்ள சுவையுள்ள சாத்வீக உணவையே வற்புறுத்துகிறது. மஹாதேசிகர் ஆகாரநியமத்தைப் பற்றி இவ்வாறு சொல்லுகிறார்: எச்சில் உணவு, தீய்ந்த உணவு, நாய் பூனை தீண்டியது, மனிதர் பசு முதலியவை முகர்ந்தது, மயிர் நகம் முதலியவை பட்ட சோறு, திருட்டுத் திண்டி, பெருமாள் நிவேதனமாகாதவை, அதிதிகளுக்கு அளிக்காத சுயநலத்தீனி, கடையினின்று வந்து கழுவாமல் சமைத்தவை, கெட்ட வழியில் சம்பாதித்தது, ஆசாரமற்றவர் சமைத்தது, சலமலங்களுடன்

சம்பந்தப்பட்டது. இந்திரியங்களுக்கும் பிராணவாயுவுக்கும் தீங்குசெய்யும் கள்சாராயம் சுருட்டு புகையிலை காப்பி தேயிலை அபின் கஞ்சா முதலியன; அமிதமான காரம் புளி உப்பானவை, மனத்திற்குப் பிடிக்காதவை, அழுக்கான உப்பிட்டவை, ஜபதபங்களைக் கெடுத்து, ஏகாக்ரத்தைச் சிதைக்கும் தாமத உணவுகள், முதலியவை விலக்க வேண்டிய உணவுகளாம்.

அந்தி, அதிகாலை, நிசி, ஏகாதசி முதலிய விரதநாட்கள், ஆகிய காலங்களில் உண்ணக்கூடாது, ஸ்நாநம் ஸந்த்யை, ஜபம், திருவாராதனம் இல்லாமல் உண்பது ஆசாரமாகாது. பிறர் கையால் பிசைந்தது, கண்டவர் அழுக்குக்கைபட்டது, எச்சில் (தட்டில்) இலையில் பரிமாறியது, சத்தழியும்படி (Devitaminised) இரண்டு முறை பக்குவம் செய்த பழங்கிரை முதலியன, கடித்துவைத்த மீதி, ஊசிப்போனவை, இவை உண்ணத்தகாதவை. பக்த கோஷ்டிகளில் சேர்ந்தே உண்பது நலம். தனக்கெனத்தனியாகச் சமைத்துண்ணக் கூடாது. தனக்கே சமைத்துக் கொண்டு தானே உண்பவன் பாபத்தை உண்கிறன் என்கிறது கீதை.

மறுநாள் வைத்த நீர், கால் கழுவிய மீதிநீர், வழிக் குழியில் தேங்கியது, வண்ணான் துறை நீர், எச்சில் கலந்தது, கலங்கியது இவற்றை விலக்கவேண்டும். அரிசி கோதுமை பால் தயிர் நெய், நல்ல காய்கனி கிழங்குகளைப் பக்குவம் செய்துண்ணலாம், நன்ருகத் தேகப்பயிற்சி சூரிய நமஸ்காராதிகள்செய்து தெய்வந்தொழுது நல்ல பசியுடன் சுத்தமான உணவை உட்கொண்டால், இரத்தம் சுத்தமாகும்; இரத்தத்தால் வளரும் தசை நாம்பு மூளை அறிவு எல்லாம் சுத்தமாகும். ஆகார சுத்தம் சித்தசுத்தமளிக்கும். அசுத்த உணவை உண்பவனுக்குச் சித்தமும் அசுத்தமாகும். கவியும் கலையும் சித்தக்கடலிற் குளித்தெடுக்கும் முத்துக்களே; ஆதலால் கவிகளுக்கு ஆசார நியமமும், ஆகார சுத்தமும் ஜபதபசாதனங்களும் இன்றியமையாதவை.


இக்காலம் புதிய புதிய நோய்கள் மனிதனைக் குத்தகையெடுத்து அறிவைக்கெடுப்பதன் முதற்காரணம் அனாசாரங்களே. ஆயிரம்பேரின் எச்சில் தட்டைக்கழுவிய நீரிலேயே மற்றும் ஆயிரந் தட்டைக்கழுவி ஆயிரம்பேர் தொண்டைக் குழியில் போன தேக்கரண்டியால் இட்டலி சாம்பார்சாப்பிடுவதும், சுசிபாராமல் அசத்தான உணவுகளை காரமும் இனிப்பும் கண்டு,நாக்கிற்காக வைத்து திணிப்பதும், பசியேயில்லாமல் மாமூலாகத் தலையணைக்குப் பஞ்சடைப்பதுபோல் அடைப்பதும், பெட்டிகளிலும் புட்டிகளிலும்சீசாக்களிலும் நாட்கணக்காகக் காற்றுப் படாமல் அடைந்து அழிந்த உணவுகளை நாகரிகம் என்று வைத்தடைப்பதும்—மனிதனை நோயாளியாக்குகின்றன. முதல்நாள் மிகுந்து ஊசிப்போன இட்டலியும் உளுந்து வடையும் மறுநாள் வெங்காயம் பச்சை மிளகாய் ஏற்றி உப்புமாவாக வந்துவிடுகின்றன. இந்தமாதிரி உணவுகளைக் கீதை கண்டிக்கிறது. தேசிகர் கண்டிக்கிருர். சுகாதார விதிகளும் கண்டிக்கின்றன.

மூளையால் வேலை செய்வது மிகக் கடினமானது. உடல் உழைப்பைவிட மூளையுழைப்பிற்கு நரம்புகளின்சக்தி நூறுபங்கு அதிகமாகச் செலவாகும். ஆதலால் மூளை வேலையிலும் மிக்க கடினமான கவித் தொழிலுடையவர்கள், ஜபதப, சுசி

ருசி ஆசார அனுஷ்டானங்களைக் கருத்துடன் போற்றவேண்டும், ஒவ்வொருவரும் அவரவர் சமயாசாரப்படி, சிறந்த ஆசாரியர்களைப் பணிந்து நடப்பது நல்லது, காலஞ்சென்ற இராமனுதபுரம் மகா வித்வான் ஸ்ரீநிவாசையங்கார், தமது சங்கீத ஆசாரியரான பட்டணம் சுப்பிரமணிய ஐயரை பயபக்தியுடன் வழிபட்டார். நம்மாழ்வாரையும் ஸ்ரீமத் ராமானுஜரையும் சதா சிந்தித்தார். ஸ்ரீராமநாமத்தை காயத்திரியுடன் ஜபித்தார். அவர் முகத்தில் நல்ல களையும், குரலில் ஒரு தனிச்சுவையும், உண்டு. கீதை லக்ஷ்மணுசாரியார் ஹனுமத் உபாசனையாலும் ஒழுக்கத்தாலும் வேத வேதாந்த நிபுணரானர்.

பூர்வாசாரங்கள் சிறந்த நோக்கத்துடன் ஏற்பட்டன. இக்காலம் மனித வாழ்க்கை வயிற்றைப் பிரமாதப்படுத்தி, அத்யாத்ம சித்தியை மறந்துவிட்டதால், அந்த ஆசாரங்களைப் பின்பற்ற முடியவில்லை. அது மனிதன் குற்றமேயொழிய பூர்வாசாரியர்களின் குற்றமன்று. உதாரணமாக, திருமண் பட்டை போட்டால் ஆங்கிலமோகம் கொண்டவர்களுக்கு அநாகரிகமாகத் தோன்றுகிறது. அதே முகத்தில் ஸ்நோவும் சாயமும் அப்பிக்கொண்டால் நாகரிகமாகத் தோன்றுகிறது. ஆனல் நாமம் விபூதி எதற்காக என்ருல் நம்மவர்களுக்குப் பதிற்சொல்லத் தெரிவதில்லை. நான் வைஷ்ணவ தர்மத்தைச் சாதனம் செய்த நாட்களில், துவாதசநாமம் போட்டுக் கொண்டிருந்தேன். எனது நாகரிக நண்பர் சிலர் என்னைக் கேலிசெய்தார்கள். திருமண் பட்டையைப் பற்றி ஒருமாதம் நான் பல சோதனைகளை நடத்தினேன். தேசிகர் ராமானுஜர் திருவுளங்களைத் தக்க சிலர்களைக் கேட்டறிந்தேன். கேசவ, நாராயண மாதவா கோவிந்தா முதலிய பன்னிரண்டு திருநாமங்களை அனுசந்தானம் செய்து நினைப்பில் வைக்க இத்திருநாமங்கள் பயனுகின்றன என்று மகா தேசிகர் பன்னிரு திருநாமத்தில் சாதிக்கிருர். இது தவிர சுகாதாரப்பொருள் ஒன்று எனக்குத் தோன்றியது. நாமம் போடும் இடங்களெல்லாம் ஆதார நரம்போட்டங்கள் உள்ளன. அவற்றிற்குக் கவசமாக இத்திருநாமங்கள் அமைந்து நரம்புகளின் சக்தியையும் ஓட்டத்தையும் விறுவிறுப்பையும் அதிகப்படுத்துகின்றன. நாமம் இரத்தத்தைச் சமநிலைப் படுத்துகிறது. நெற்றிக்கு நடுவே மனம் உள்ளது. அதில் நீறு நாமம் பொட்டு இடுவதன் பொருள், அந்த இடத்தில் தியானத்தை ஊன்றவேண்டும் என்பதேயாம்.

இடா, பிங்களா, ஸுஷும்ன ஆகிய மூன்று யோக நரம்புகளையும் மூன்று பட்டைகள் குறிக்கும். நாமமும் முப்பட்டை விபூதியும் முப்பட்டையே. இந்தமாதிரி பூர்வானுஷ்டானங்களுக்கெல்லாம் பொருளுண்டு. உதாரணமாக மந்திர ஜபத்தால் நரம்புகளில் சுகமான சக்தி ஏறுகிறது. சித்தசுத்தியுண்டாகிறது. மூளைக்குத் தெளிவுண்டாகிறது. அதிகம் சொல்லுவானேன், ஆசாரசீலரின் முகக்களையும் பாருங்கள். அனாசார ஜன்மங்களின் களையற்ற நோய்முகத்தையும் பாருங்கள். வள்ளுவர் "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்ருர். பொதுவான சமயாசாரங்களை யதாசக்தி அவரவர் அனுஷ்டிக்கவேண்டும்.



## பாசுரமும் ஓவியமும்

**இரண்டாவது சித்திரம்** **பெரியாழ்வார் திருமொழி**

சித்திர விளக்கம் —*பூச்சூடல் 5-வது பாசுரம்*

புள்ளினைவாய்ப்பிளந்திட்டாய் பொருகரியின்கொம்பொசித்தாய் ★
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய் ★
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதடியேனடித்தேன் ★
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய்.

—பெரியாழ்வார்.



# தியாகராஜ கீர்த்தனை

*ராகம்—அசாவேரி* *தாளம்—ஆதி*

லேகனு நின்னு ஜுட்டு கொன்னரு
ஏக ஹ்ருதயுலை நித்யானந்தமு - லே
ஸ்ரீகர கருணாஸாகர நிருபம
சின்மயாச்ருத சிந்தாமணி நீயட - லே
ஸௌந்தர்யமுலலோ சுகமு ஸீதம்மகு
ஸௌமித்ரிகி கனுல ஜாடல சுகமு - லே
சுந்தர முகமுன சுகமு பரதுனிகி
சுக்ஞானரூபமுன சுகமு ரிபுக்னுனிகி - லே
சரணயுக முனந்து சுகமு ஆஞ்சனேயுனிகி
வரகுண தியாகராஜ வரதானந்தமு - லே

**ஆச்ரத ரக்ஷகத்வம் உன்னிடத்தில் இல்லாமலா உன்னை எல்லோரும் சூழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்? அது மட்டுமா! நீ கருணாசாகரனல்லவா? உன்னிடம் உள்ள இவ்வளவு மகிமையை அறிந்தே எல்லோரும் உன்னைச் சுற்றியிருக்கின்றார்கள்!**

பி. ஸ்ரீ

# 3. உபநிஷத ஞானதீபம்

"சிஷ்யா!" என்று கூப்பிட்டார் குரு. அவன் எழுந்து நின்று அவர் நோக்கிய திசையைத் தானும் நோக்கினான். "அந்த இருட்டறைக்குள்ளே போ" என்று கட்டளையிட்டார். உடனே புறப்பட்டான் அவன். "அங்கே போய் அந்தக் கரும் பூனையைப் பிடித்து வா!" என்றார் அவர். அவன் தீவிரமாகச் சென்றான். உடனே அவனைச் சற்று நிறுத்தி, "அந்தக் கரும்பூனை அந்த இருட்டறையில் இல்லை!" என்றார். "எனினும் அதைப் பிடித்து வா" என்பது முடிவான கட்டளை. சிஷ்யன் இருட்டறைக்குள்ளே மறைந்து போனான். என்ன குரு! என்ன சிஷ்யன்! ஆம்; அவ்வளவு குரு பக்தி, குரு விச்வாஸம்!

ஆனால் இது மூடபக்தியல்லவா? குருவின் சொல்லுக்கு ஏதாவது புதைபொருள் இருக்கவேண்டும். ஞானக்கடல் அல்லவா? தனக்கு அது ஒரு பரீக்ஷை என்றே எண்ணினான். ஒவ்வொரு பகுதியாக அந்த அறையின் சுவர்களையும் தரையையும் தொட்டுத் தொட்டுச் சோதித்தான். ஒருபுறம் சுவருக்குப்பதில் கனமான திரையொன்று தென்பட்டது. சிறிது தூக்கிப் பார்த்தான். என்ன அதிசயம்! அறை முழுதும் ஒளிமயமாகிவிட்டது. திரைக்கு மறுபுறம்—அறையின் அந்தப் பகுதியில் — ஓர் அழகான தீபம் தகதகவென்று எரிந்துகொண்டிருந்தது. கனமான கருந்திரை மறைத்திருந்தது அந்த ஒளியை. திரை தூக்கியதும் இருட்டறையெங்கும் பரவிவிட்டது தீப மங்கள ஜோதி. இதைத் தான் கண்டுபிடித்து இதன் உள்ளுறை பொருளாகிய பாடத்தையும் கற்றுக் கொள்ளவேண்டுமென்றே குரு எண்ணியிருக்கவேண்டும் என்று தீர்மானித்தான் சிஷ்யன்.

* * * *

நம்முடைய வாழ்க்கை ஓர் இருட்டறைபோலக் காண்கிறது. ஏனென்றால் வாழ்வின் ஒரு பகுதியைத்தான் நாம் காண்கிறோம். ஆம், இருட்டறைப் பகுதியைப் பார்க்கிறோம், அனுபவிக்கிறோம். வாழ்வின் மற்றப் பகுதி ஒளிமயமாக இருக்கிறது. அதுதான் நமது உள்ளத்தின் ஆழமான பகுதி. அந்த உள்-மனத்திற்கு உள்ளேதான் ஞானதீபம் வாடா மணிவிளக்காக எரிந்துகொண்டிருக்கிறது. அந்த மங்கள ஜோதி நம்முடைய புற வாழ்க்கையில் வீசாதபடி மறைத்திருக்கும் கருந்திரையை எப்படி விலகச் செய்வது? இது குறித்து எத்தனையோ தத்துவ ஆராய்ச்சிகளும் சமய சம்பிரதாய ஆராய்ச்சிகளும் கிளம்பியிருக்கின்றன.

* * * *

வேத முனிவர்கள் ஞானதீபத்தைக் கண்டவர்கள். யோகமுறையால் அவர்கள் கருந்திரையை விலக்கி ஒளியைக் கண்டார்களென நம்புகிறோம். இப்படியே பல வேறு சமயங்களிலும் பல வேறு மகான்கள் உண்மையொளியைக் கண்டிருக்கலாம். எனினும் சமய வாதங்களும் ஆராய்ச்சிகளும் பிரசாரங்களும் நாளடைவில் எவ்

வளவோ மதாவேசத்தைக் கிளப்பி விட்டன. மதாவேசமும் மதவெறியும் திரையை விலக்குவதற்கு மாறாக, 'திரைக்குத் திரைபோட்டு விட்டனவோ?' என்றுகூட வருந்தும்படி அவ்வளவுதூரம் இருட்டடிப்புச் செய்துவிட்டன.

வேத காலத்திலேயே மூட நம்பிக்கைகளும் இருந்தன என்று கருதலாம். யாகங்களிலும் கிரியைகளிலும் உட்பொருளும் உண்டு; பொருளற்ற சடங்குகளுமுண்டு; நல்ல அழகான கற்பனைகளும் உண்டு. பொருளற்ற, பயனற்ற கற்பனைகளும் உண்டு. உதாரணமாக, ஒரு முனிவர் யாகம் செய்துகொண்டிருந்த போது, தாம் வளர்த்த பூனை தொந்தரவு கொடுக்குமென்று அதைப் பிடித்து ஒரு தூணில் கட்டிவைத்தாராம். பிறகு அந்த யாகத்தைச் செய்த பிறரும் — தாங்கள் பூனை வளர்க்காதவராயிருந்தும்-ஒரு பூனையைத் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து கட்டிப்போட்டுச் சடங்குகளை நடத்த ஆரம்பித்தார்களாம். இத்தகைய மூட நம்பிக்கைகள் வேத காலத்திலும் பிற்காலத்திலும் மலிந்துவிட்டன.

மேலும் யாகங்கள் நீண்டு கொண்டே போயின; ஆடம்பரமாகிவிட்டன. அதனால் எவ்வளவோ பொருட்செலவும் ஏற்பட்டது. யாகங்களில் பிராணிகளும் கொலை செய்யப்பட்டன. யாகங்களால் குருமார்களின் செல்வாக்கும் அதிகரித்தது. இந்த நிலையிலேதான் ராஜ குலத்தைச் சேர்ந்த பெரியோர் — ராஜரிஷிகள் என்று போற்றுதற்கு உரிய சீலர்கள்—யக்ஞத்தைக் காட்டிலும் ஞானயக்ஞமே மேலானது என்று ஸ்தாபிக்க முன் வந்தார்கள். பிரம்ம ரிஷிகள் பழமையைப் போற்றி நிற்க, ராஜரிஷிகள் பரந்த அனுபவம் பெற்றவர்களாய் ஞானப் புதுமையைச் சடங்குகளுக்கும் மேலானதாக மதித்தார்கள். இத்தகைய பெரியோர்கள் ஏற்றிவைத்த ஞானதீபமே உபநிஷதம் என்று சொல்லப்படுகிறது.

* * * *

உபநிஷத ஞானம் பலவேறு உபநிஷதங்களில் வெளிப்படுகிறது. ஆதியில் பத்து அல்லது பன்னிரண்டு உபநிஷதங்களே யிருந்தன. பிறகு அவை நூற்றெட்டாகப் பெருகிவிட்டன. மகம்மதியர் ஆட்சியில் அல்லாஹோப நிஷத் என்று அல்லாவின் பெருமைகூறும் உபநிஷதம் கூடத் தோன்றிவிட்டது. ஸ்ரீவைஷ்ணவ இயக்கத்தின் ஆதிக் கத்திலே சேஷோபநிஷதம் என்று ஆதிசேஷனுடைய அம்சமாக மதிக்கப்பட்ட ஸ்ரீ பகவத் ராமானுஜரின் பெருமை கூறும் உபநிஷதம் ஒன்றும் தோன்றிவிட்டது.

* * * *

இந்தஉபநிஷதங்களில், "யதார்த்த மனிதன் உடம்பல்ல, ஆத்மாவே!" என்ற கொள்கை வற்புறுத்தப்பட்டது. ஆத்மாவின் இயல்பு நுட்பமாக ஆராயப்பட்டது. பரமாத்மா உண்டு என்பதும் அலசி ஆராய்ந்து வலியுறுத்தப்பட்டது. ஜனன மரண விவகாரங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. "மரணத்தின் பின் மனிதர் நிலை என்ன? மறு பிறப்பு உண்டா?" என்ற பிரச்னையும் விசாரணைக்கு வந்தது. "உலகத்தில் துன்பம் ஏன் இருக்கவேண்டும்? தீமை ஏன் இருக்கவேண்டும்" என்ற பிரச்னையும் ஆராய்ச்சிக்கு இலக்காயிற்று.

"ஆத்மா அழிவற்றது; அதன் ஆடையாகவோ, வீடாகவோ தான் உடம்பைக் கருதவேண்டும்" என்ற கொள்கையும் உபநிஷதங்களில்

தெளிவாக விளக்கப்படுகிறது. "நாம் செய்யும் செயல் ஒன்றும் வீணாகப் போய்விடுவதில்லை. நல்வினையும் தீவினையும் நிச்சயமாகப் பல பிறப்புகளிலும் தொடர்ந்துவந்து பலனைத் தரும்" என்ற கொள்கை ஒரு ஸூக்ஷ்மமான இயற்கைச்சட்டமாயிற்று. ஜனன மரண சக்கரத்திலிருந்து விடுதலை பெறுவதே முக்தியென்று பிரசாரம் செய்யப்பட்டது. இத்தகைய ஆராய்ச்சிகளில் தலையிட்டு அங்கங்கே ஞான தீபங்களை ஏற்றிவைத்தவர்களில் முக்கியமானவர்கள் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த ஞானிகள் என்று ஊகிக்கலாம்.

*　*　*　*

நாலு வேதங்களுக்கு ஆறு அங்கங்களாக நியாயம், வைசேஷிகம், ஸாங்கியம், பூர்வமீமாம்ஸம், யோகம், வேதாந்தம் ஆகியவை ஏற்பட்டன. வேதாந்தம் என்பது வேதாந்த ஸூத்திரங்கள். இவற்றைப் பிரம்ம ஸூத்திரங்களென்றும் சொல்லுகிறார்கள். ஸூத்திரம் நூல், கயிறு. சிதறிக்கிடக்கும் உபநிஷதக் கொள்கைகளைச் சேர்த்துக் கட்டுகின்றன இந்த ஸூத்திரங்கள் என்பர். இத்தகைய வேதாந்த ஸூத்திரங்களை வேதாங்கமாகவும், உபநிஷதங்களை வேதாந்தமாகவும் குறிப்பிடுகிறார்கள்.

வேதாந்தம் என்றால் வேதத்தின் முடிவு. உபநிஷதக் கொள்கைகளை வேதாந்தமென்றும், வேதசிகரமென்றும், வேத சிரஸ் என்றும் ஞான காண்டம் என்றும் போற்றுகிறோம். யாகம் முதலான கர்மங்களைக் கூறும் வேதங்களைக் கர்ம காண்டம் என்கிறோம். கர்ம காண்டத்தைக் காட்டிலும் ஞான காண்டமே முக்கியமென்பது ஹிந்துக்களின் அபிப்பிராயம்.

உபநிஷதக் கொள்கைகளைத்தான் பிற்காலத்தில் சங்கரர் அத்வைதமாகவும், ராமானுஜர் விசிஷ்டாத்வைதமாகவும், மத்வர் த்வைதமாகவும் விவகரிக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு கொள்கை, கடவுள் அல்லது பிரம்மம் ஒருயிராக எங்கும் நிறைந்திருக்கிறது என்பது. அகத்தும் புறத்தும் ஒரே உயிர்—ஒரே சக்தி—நிறைந்து ததும்புகிறது-என்ற இந்த வேதாந்தக் கொள்கையை இப்போது உலகப் பேரறிவாளர்கள் பலரும் ஒரு முகமாக ஒப்புக்கொள்கிறார்கள்.

இந்தக் கொள்கையின் பொருளும் பயனும் மகத்தானவை.

தந்தையால் வகுக்கப்பட்ட
சராசரப் பொருள்கள்தோறும்
வந் (து)அவன் தீம்பால்நெய்போல்
உயிர்க் (கு)உயி ராகிவாழும்
பந்தம்அ (து) உணர்ந்துநேரே
பார்க்குங்கால் பகை யார்? நண் (பு) ஆர்?

[தீம்பால்-இனிய பால்.]

என்று பாரதம் பாடிய வில்லிபுத்தூரார் வாக்கிலே, உபநிஷத ஞானத்தின் மகத்தான பொருளும் பயனும் ஒருவாறு விளங்குகின்றன. ஒரே உயிர் என்ற தெய்விக பாசபந்தத்தை உணர்ந்து நேரே பார்த்தால் பகைவரில்லை, எல்லாரும் சகோதரர் என்று தெரியவருகிறதாம். ஸர்வஜன சகோதர தர்மத்தின் ஆழ்ந்தகன்ற அடிப்படையல்லவா வேதாந்தம் — உபநிஷத ஞானம்?

இந்த ஞானத்தைத்தான், "எத்தனையோ மதக்கோட்பாடுகள் என்ற கனத்த திரைகளால் ஏற்பட்ட இருட்டைப் போக்கும் ஒரு தீபம்" என்கிறார் மிஸ். ப்ளோரா ஆனீ ஸ்டீல் என்ற சரித்திர ஆசிரியை.


உபநிஷத ஞானதீபம் உலகமெங்கும் ஒளி வீசக்கூடிய காலம் இந்த மகாயுத்தத்தின் விளைவாக நெருங்கி வருகிறதென்றே சொல்லலாம்.

உலகப் பிரசித்திபெற்ற ஜெர்மன் தத்துவ சாஸ்திரி ஷோப்பன் ஹேர் உபநிஷதங்களைக் குறித்து, "அவை என் வாழ்வில் சாந்தியளித்தன; அவையே என் மரணத்தறுவாயிலும் ஆறுதலளிக்கும் என்பது எனது நம்பிக்கை" என்றார். சமீபத்தில் ஹாலிவுட் பிரதேசத்திலும் இந்த ஞானம் பரவி வருகிறது என்று தெரிகிறது.

பிரபல விஞ்ஞானியாகிய ஆல்டோஸ் ஹக்ஸ்லி, கவிஞரான கிரிஸ்டஃபர் இஷர்வுட், பிரபல ஆசிரியர்களான ஜான் வான் ட்ருடன் ஸாமர்ஸெட் மாகம் ஆகிய பிரிட்டிஷ் அறிஞர்கள் (தற்சமயம் அமெரிக்காவிலிருப்பவர்கள்) வேதாந்தம் கற்றுவருகிறார்களாம். இது ஒரு சுப சூசகம்.

---

## ஞானச்சுடர்



இருட்டறையில் தென்பட்ட கனமான கருந்திரையை தூக்கியதும் அறையெங்கும் பரவிவிட்டது தீபமங்கள ஜோதி... வாழ்வின் ஒரு பகுதி இருட்டறை போன்று காண்கிறது; மற்ற பகுதி ஒளிமயமாக இருக்கிறது. அதன் உள்ளேதான் ஞான தீபம் வாடாமணி விளக்காக எரிந்து கொண்டிருக்கிறது. அந்த ஜோதியை மறைத்து இருக்கும் கருந்திரையை எப்படி விலக்கச் செய்வது?

---

குழந்தைகளுக்கென்றே
[illegible] வெளியீடு

# பாலர் மோகினி

பாலர் உலகில் - ஞானச்
சுடரேற்றி வைப்போம்
ஞால மிதில் நம் - நாட்டு
மதிப்பைத் தூக்கிவைப்போம்.

# பொய்

பொய் என இகழ்கிறீர் புவிக்குளே பிறந்த நீர்;
மெய் எனப் புகழ்கிறீர் மிகுந்த பொய் அனைத்தையும்.
பொய்யை மெய்யதாகவே புகலுகின்ற வீணரே!
பொய்யு மெய் யுமேதெனப் புகுந்து பா ரும் உம்முளே.

உதயமான போதிருந்(து) உரைத்த பொய்கள் எத்தனை?
இதயமார மறைத்து நீர் இசைத்த பொய்கள் எத்தனை?
முதியரா ன போது பொய் முடித்துரைத் த தெத்தனை?
புதியதா ன பொய்களே புனைந்துரைத் த தெத்தனை?

கடையிலே அளந்தபொய் கணக்கிலே அடங்குமோ?
நடையிலே உடையிலே நடித்த பொய் கணக்கிலே.
விடையிலே வினவிலே விரித்த பொய் கள் ஓர்ந்துநீர்
முடிவிலே புகலுமின் மொழிந்தபொய் எதுவென.

பெற்றபெண் மணத்திலே புகன்ற பேச் சுபொய்யலோ?
உற்றபொன் வணிகரும் உரைத்த மாற் றுபொய்யலோ?
விற்றபண் ட நல்லதாய் விளம்புகின்ற பொய்யலோ
உற்ற பண் ட மாற்றென உலகு போற் றுகின்றதே?

முரண்டுகின் ற பிள்ளையை முடுக்கிவாய் அடைத்திட
வெருண்டுபூ ச்சிகாட்டிட விளம்பியது பொய்யலோ?
சுருண்டுதாழ் குழலியர் சுகம்பெற விழைந்துநீர்
திரண்டெழுந் த நாவிலே திரிப்பதும் புளுகலோ?

கா ணுமாறு நாடியைக் கணக்கிடும் வைத்தியர்
மாணமா மருந்துடன் மறைந்தபொய் க ளெத்தனை?
மாணவர் திருந்திட மறைத்து பா த்தியாயரும்
வே ணுமார்க் கிடாமலே விளம்புபொய் கள் எத்தனை?

தொடுத்ததோர் வழக்கிலே தொடர்ந்துநீ தி கூறிவாய்
அடித்துநின் ற வக்கீலும் அளந்தவை புளுகலோ?
கொடுத்த சாட் சியாவுமே குடம்நிறை புளுகலோ?
முடித்தபோ து நீதியும் முதிர்ந்தெழுந்த பொய்யலோ?

வழக்கிலே உரைக்கிறீர் மனத்திலே திரிக்கிறீர்.
வழக்கமென் று நாவினால் வழங்கு பொய்களெத்தனை?
பழக்கமென் ற மட்டிலே பகர்ந்தபொய் கள் எத்தனை?
முழக்கமா கவேநிதம் முழுப்புளு குரைக்கிறீர்.

தேசதந் திரங்களைத் தெரிந்தவர் புகல்வதும்
ராஜதந் திரங்களில் இறங்குவார் புகல்வதும்
காசுதந் தவர் மனங் களிக்கவே நடிப்பவர்
பேசுதந் திரங்களும் பெரிய பொய் களாகுமே.

நலம்பெறச் சுகம்பெற நரைமயிர் கறுத்திடப்
பலநிற மருந்துகள் படைத்தவை விலைபெற
பலநிறப் படங்களைப் பலவகை வரைந்துநீர்
பொலிவுறு விளம்பரப் புளுகுகள் புகலுவீர்.

நேற்றுவந் தபேப்பரில் நிலவிநின்ற செய்தியும்
ஏற்றவாற டுத்தநாள் இசைந்தபொய் யதாகுமோ.
மேற்றிசைத் தலைவர்கள் மிடுக்குமேட் டிமையுடன்
சாற்றுவீ ர வார்த்தைகள் ஜகப்புளு க தாகுமே.

பட்டுவேட் டிகட்டியே பகட்டுசட் டை யிட்டுநீர்
கொட்டுமே ள மாகவே கொடுத்தநல் வரவெலாம்
ஓட்டி நின்று டக்கையாய் உவந்து நீர் புகழ்ந்ததும்
கிட்டவே நெருங்கிடக் கிளறுபொய் முலாமலோ?

படங்களில் பலவகைப் பழங்கதை உயிர்பெற
நடங்களும் நவரச நயங்களும் சீன்களும்
இடங்களின் இயல்பொடு இசைந்தபாட் டுடன்நிதம்
படங்களைப் படைப்பதும் பருத்தெழுந்த பொய்யலோ?

கோடிகோடி கோடியே குவலயத்துதித்தவர்.
நாடிநாடி நாடியே நவின்றபொய் கணக்கிலை.
தேடித் தேடித் தேடியே தெரிந்துரைத்த பொய்களை
மூடிமூடி மூடியே முடிவிலாதுரைப்பரே.

பொய்யென இலங்குமிப் பொதிந்தசீழ் உடலினை
மெய்யென இலக்கண விதிபெற விளிப்பரே.
பொய்யிலும் புரட்டிலும் புரண்டிடும் புவியதில்
மெய்யிலே நடப்பவர் மிகுப்புளுகராவரே.

உளனவன் இலனெனில் உரைத்தவார்த் தை பொய்யதே!
இலனவன் உளனெனில் இசைத்தவார்த் தை பொய்யதே!
உளனென இலனென உரைத்திட முடிந்திடா
நலனவன் படைப்பிலே நவின்ற பொய் யுமேதடா?

!



# குழந்தைகளுக்கு

சூடாமணி

## 2. சாகாத ஈயின் கதை

சிங்க மஹாராஜாவின் ஸபையிலே கரடிராயர், நரிக்குலத் தலைவர் சம்பு ஐயர், கும்பநாத சர்மா, கொண்டையப்பச் சேவலார் எல்லாரும் கூடி இருந்தார்கள். சிங்க மஹாராஜா முயல் அண்ணு கொண்டு வந்து கொடுத்த கைத் தடியைப் பிடித்துக் கொண்டே ஸபையாரை எல்லாம் ஒரு முறை பார்த்தார் "இந்தக் கைத் தடியின் பிடிக்குள்ளே இந்த ஈ எப்படி வந்தது?" என்று கேட்ட கேள்விக்கு யாருமே பதில் சொல்லவில்லை.

சிங்க மஹாராஜாவின் கண்கள் சிவந்தன. கோபத்திலே மேசைமேல் ஓங்கி ஒரு அறை அறைந்தார். ஸபை நடுங்கி விட்டது. "ஸமஸ்தானத்திலிருந்து ஏராளமான பணத்தைக் கொட்டி எத்தனையோ பேர்களைப் பெரிய பெரிய பரீக்ஷைகளெல்லாம் பாஸ்பண்ணிப் பட்டம் பெற்று வரப் பல இடங்களுக்கு அனுப்பினேம். ஆனாலும் இந்தக்கேள்விக்கு ஒருவராவது பதில்சொல்ல முடியவில்லை. என்ன பிரயோஜனம்? மூடர்கள் நிறைந்து போனர்கள் என் ஸபையிலே!" என்று கர்ஜித்தார்.

கும்பநாத சர்மா வெகு வணக்கமாக எழுந்தார். "ராஜாதிராஜ குலசேகர மார்த்தாண்ட அரிகேஸரி வர்மரே! ஸபையார்களே, அடியேன் தண்டம். அந்த ஈ எப்படி அந்தப் பிடிக்குள் வந்தது என்று சொல்லுகிறேன். கேட்கவேணும்" என்று சொல்லிக்கொண்டு கதையை ஆரம்பித்தார்:—

அநேக ஆயிரம் வருஷங்களுக்கு முந்தின ஒருகாலம். உலகத்திலே மனித ஜாதியே இல்லாத ஒரு காலம். இந்தப் பூமியில் பல இடங்களில் சேறும் நீருமான பிரதேசங்கள் இருந்த காலம். அந்தக்காலத்தில் நம்முடைய தும்பிக்கையப்பரை விட நூறு மடங்கு பெரிய மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்தச் சதுப்பு நிலங்களில் ஆகாசத்தையேதொடும்படி பெரியமரங்கள் வளர்ந்திருந்தன. அந்த மரங்களோடு இந்தக் காலத்துப் பெரிய மரங்களை ஒப்பிட்டால், இவைகளெல்லாம் கீரைத் தண்டுகள் போலத்தான் இருக்கும்.



அப்படிப் பட்ட பூதாகாரமான மரங்கள் அடர்ந்த காட்டிலே பலவிதமான அழகிய பூச்சிகள் கும்பல் கும்பலாகப் பறந்து திரிந்தன. ஒரு நாள் ஒரு ஈ அந்த மரங்கள் ஒன்றின்மேல் இளைப்பாற உட்கார்ந்தது. அப்பொழுது அந்த மரம் ஈயைப் பார்த்து,

"ஏ அணுப் பிராணி, அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்று இடி இடித்தது போல் குரல் முழங்கக் கேட்டது. ரொம்ப ரொம்ப மெலிந்த குரலிலே "இங்கே இளைப்பாறுகிறேன்," என்றது ஈ.


"அட அற்பப் பிராணியே, உன்னைப் போல நான் இருந்தால் ஒருபோதும் இளைப்பாறமாட்டேன்" என்றது மரம்.

"ரொமப நன்றாய் இருக்கிறது! இருந்த இடத்தை விட்டு நகராமலே இருக்கிற நீ தானா இளைபாறுதவன்?" என்றது அந்த ஈ.

"அறிவு கெட்ட ஈயே, உன்னை என்னோடு ஒப்பிட்டுப் பேசாதே. நான் ஆயிரக்கணக்கான வருஷங்கள் வாழ்கிறவன். நீயோ அற்ப நாள் வாழ்கிற பிராணி. எனக்குக் காலத்தைப் பற்றிக் கவலையே இல்லை. ஆனால், நீயோ சீக்கிரம் சாகவேண்டிய பிராணி" என்றது.

"நீ மட்டும் ரொம்ப நாள் உலகத்திலே வாழப் போகிறாய் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று அந்த ஈ கேட்டது.

அதற்கு அந்த மரம், "நான் ஏற்கெனவே ஆயிரக்கணக்கான வருஷங்கள் வாழ்ந்தாய்விட்டது. என்றாலும் நான் இன்னும் சிறு குழந்தை. அதனாலேதான் இன்னும் ரொம்ப நாள் உலகத்திலே இருப்பேன் என்று எனக்குத் தெரியும். என்றைக்குமே அழியாமல் வாழ்கிற வாழ்வு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா? உன் நிலைமையை நினைத்து ரொம்பத் துககப்படுகிறேன். நீ பிறந்தவுடனேயே இறந்து போவாய்! நானோ அழியாமல் என்றும் இருப்பேன் என்று எண்ணிக்கொண்டும் கனவு கண்டு கொண்டும் இருக்கிறேன்" என்றது.



"எனக்கும் சந்தோஷமான கனவுகள் இல்லை என்று நினைக்காதே," என்றது அந்த ஈ. அதைக் கேட்டவுடனே அந்த மரம்

குலுங்கக் குலுங்கச் சிரித்தது. அப்போது அந்த ஈ இருந்த பக்கத்திலே மரப்பட்டை வெடித்தது. அந்த வெடிப்பிலிருந்து ஒரு வகையான பிசின் ஊறி வந்தது. ஈ பறந்து போகும் முன்னே அந்தப் பிசின் ஈயைப் பற்றிக் கொண்டது. ஈ அந்தப் பிசினில் புதைந்துவிட்டது.

அநேக ஆயிரம் வருஷங்கள் சென்றன. ஒரு நாள் அந்த மரம் வேரோடு சேற்று நிலத்திலே சாய்ந்தது. மண்ணிலே புதைந்தது. ஆனால் அந்தப் பிசினுக்குள் அகப்பட்ட அந்த ஈ அப்படியே அழிந்து போகாமல் இருந்தது. பின்னும் ஆயிரக் கணக்கான வருஷங்கள் சென்றன. சேற்று நிலங்களில் கடல் புகுந்தது. பிசினிலே புதைந்த ஈயும் அந்த மரமும் எல்லாம் கடலின் அடியிலே எத்தனையோ ஆயிரம் வருஷங்களாகப் புதைந்து கிடந்தன.

ஒரு மாஸத்திற்குமுன் நான் ஸமுத்திரக் கரையோரமாக ஓடிப்போன போது கரையிலே ஒரு இடத்தில் நின்று கடலின் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தேன், அப்போது கடல் அலை கண்ணாடி போன்ற ஒரு பொருளைக் கரை ஓரமாகக்கொண்டுவந்து போட்டது. நான் அதைக் கொண்டுவந்து நமது ஸமஸ்தானத் தட்டான் தவளைப்பத்தரிடம் காட்டினேன். தவளைப் பத்தர் அதை கைத்தடியின் பிடியாகச் செய்து கொடுத்தார். அந்தப் பிடி அந்த மரத்தின் பிசின்தான். அந்தப் பிசினிலே புதைந்த ஈதான் அது. மண்ணிலே புதையுண்டு கல்லாய்ப்போன அந்தப் பிசினை அம்பர் என்பார்கள்.

* * * * *

இந்தக் கதையைக் கேட்டவுடனே சபையில் இருந்தவர்கள் எல்லாரும் கரகோஷம் செய்தார்கள். மஹாராஜாவும் "ஸபாஷ்! ஸபாஷ்! இன்று முதல் கும்பகாதசர்மாவே நமது பிரதான மந்திரியாக இருக்க வேணும்!" என்று கட்டளை கொடுத்துவிட்டார். இந்த விதமாகத்தான் கும்பகாதசர்மா காட்டில் உள்ள சிங்கராஜ ஸபைக்கு மந்திரியானார்.



அப்புறம் ?




## 3. பரபரப்பும் பரிதவிப்பும்

பரந்தாமனின் லீலாவினோதங்களின் அருமை பெருமைகளை, விசித்திர விசேஷங்களை, அளவிடுதல் சாத்தியமோ! ஒரே பழத்தின் ஒரு பகுதியில் இனிப்பையும், வேறொரு பகுதியில் புளிப்பையும்—ருசியையும் அருசியையும் கலந்தேயல்லவா அளிக்கிறார்! ஒரேகுடும்பத்தில் சாதுவையும் சோதாவையும் தோற்றுவிக்கிறார்! ஒரே சமூகத்தில் நல்லவர்களையும் அல்லவர்களையும் சிருஷ்டித்தருளி, வாழ்க்கையின்நிழல் ஒளியும் நிழலும் போல வென்று காட்டுகிறாரல்லவா?

அவர் சிருஷ்டிக்கும் சம்பவங்களில்—நிலையில்—பரபரப்பு என்பது ஒரு முக்கிய. ஜீவன் நிறைந்த படனே நிலையல்லவா? ஆனந்தக்கூத்தாடுபவரிடையேயும் பரபரப்பைக் காண்கிறோம்; ஆத்திரத்தாண்டவமாடுபவரிடையேயும் பரபரப்பைப் பார்க்கிறோம். ஒரேவிஷயத்தைக் குறித்து இருவித பரபரப்பும் வெவ்வேறு இடங்களில் ஒரேசமயத்தில் தோன்றுவதுதான் வாழ்க்கையின் நிழல்: இயற்கையின் சிருஷ்டி விநோதம்.

பருவிப சிம்ம மகாராஜவின் பிரகடனமும், ராஜகுரு நிர்மலானந்த ஸ்வாமிஜியின் வியாக்கியானமும் இந்த இயற்கை நியதிக்கு விரோதமின்றி இருவித பரபரப்பையும் உண்டாக்கின என்று சொல்ல வேண்டியதில்லை. சநாதனிகள் என்று பறைசாற்றிக் கொண்டு உண்மை சநாதன தர்மத்தைக் கடுகளவும் அனுஷ்டிக்காத சிகாமணிகளின் வட்டாரத்தில் ஏற்பட்ட பரபரப்புக்கும் பேரிரைச்சலுக்கும் அளவேது? அதேசமயம் ஆனந்தக் கூத்தாடும் ஜனங்களுக்குக் கணக்கேது? நரசிங்கப்பட்டினத்தில் மட்டுமில்லை; அந்த சமஸ்தானத்திற்கு வெளியேயும் இது சம்பந்தமான பரபரப்பு பிரமாதமாயிருந்தது. உதாரணமாக, நாராயணகிரி கிராமத்தில், அக்ரஹாரத்தில் ஆத்திரக் கூச்சல் அண்டத்தையளாவியது என்றால் மிகையாகாது. அதுவும் பெரிய பண்ணை கோபிநாத சாஸ்திரிகள் கோபநாதராகவே காட்சியளித்தார். கண்ணனின் வேணு நாதம் ஊர்முழுதும் கேட்டது என்பதற்கு நேர்மாறாக இவரது கோப நாதம் கிராமத்திற்கு வெளியேயுள்ள சேரியில் கூட எதிரொலித்தது! அவ்வளவு உச்சஸ்தாயியில் அலறினார்!

"காலத்திற் சேற்ற கோலம் என்பது சரியாகிவிட்டது. அந்த ராஜாவுக்குத் தானாகட்டும், அந்த ராஜகுருவுக்குத்தானாகட்டும் பூஜை ஏன் இப்படிக்கெட்டு அழிய வேண்டும்? இனி கோவிலேது? குளமேது? குலமேது? எல்லாம் அழிந்து போய்விட்டது!" என்று அவர் எழுப்பிய இரைச்சலுக்கு அவரது சகாக்கள் பின்பாட்டு இசைத்தனர்.

*   *   *   *

நாராயணகிரி சேரியில் ஒரே பரபரப்பு. காரணம் திடீரென்று வீரபத்திரனது குடும்பம் திரும்பியது தான். அதுவும் அவன் அங்கஹீனனாய்—ஒரு காலற்று—நிற்பதைக் கண்ட சேரிமக்கள் அனைவரும் பல விதமான எண்ணங்களால் தாக்கப்பட்டு, அவரவர்க்குத் தோன்றியபடியெல்லாம் பேசலாயினர். அவனை எல்லோரும் சூழ்ந்துகொண்டு விசாரித்ததும், ஒவ்வொருவர் விசித்திரமான வார்த்தைகளைச் சொல்லியதும் அவன் மனதில் பெரும் புயலை ஏற்படுத்தினவெனலாம்.

"என்ன அண்ணாத்தே! நம்ம தெய்வங்களை அலட்சியமா விட்டுட்டு அநியாயமா போனே, அதான் காலை ஒடச்சுக்கிட்டே!" என்றான் ஒருவன்.



"அவுங்க தெய்வம் அவுங்களுக்குத்தான் சரி. நமக்கு ரொம்பப் பொல்லாதுன்னு நான் முன்னமே சொல்லலையா ஒங்கிட்டே?" என்றான் இன்னொருவன்.

"வீரபத்திரன்னு ஒனக்குப் பேர் வெச்சாங்களே, நீ நம்ம வீரன் இருளன் எல்லாரையும் பகைச்சிக்கினு நாராயணன் நாராயணன்னு போனயே, அந்த நாராயணன் ஒன் காலை என்னா பண்ணார்னு கேட்கறேன்?" என்றான் மூன்றாமவன்.

இவ்வாறுஅடுக்கடுக்காகக்கேட்ட கேள்விகள் அவனுக்கு ஒருபுறம் ஆச்சரியத்தையும் ஒருபுறம் அருவருப்பையும் கொடுத்தன. "நான் பண்ண பாவத்திற்கு நாராயணன் என்ன பண்ணுவான்? ஏதோ கடுகளவு புண்ணியம் பண்ணியிருந்ததற்கு மூன்று வருஷமாவது ஆனந்தமாக இருக்கும்படிப் பண்ணினான். போனஜன்மத்திலே பண்ண பாவ மூட்டை இப்போ தலையை அழுத்தினா இந்த கதிதான். எப்போ வண்டியிலேருந்து விழுந்தேனோ அப்போ பிடிச்சு என் பாவத்தினுடைய பலனை அனுபவிச்சிண்டிருக்கேன்." என்று சாந்தமாய் பதிலுரைத்தான் பக்குவமடைந்த பக்தன்.

அவன் கீழேவிழுந்ததுதான் அவ



னுக்குத் தெரியும்; கண்ணைத்திறந்து சற்று நினைவுடன் பார்க்கும் போது அவன் வலது காலில் முழங் காலுக்குக் கீழ்பாகத்தைக் காண வில்லை. "எல்லாம் வல்ல இறைவ னின் திரு உள்ளம் இப்படியோ!" என்று மனம் தேறினன். ரணம் ஆறினதும் கிராமத்திற்குச் செல் வதே மேல் தற்காலிகமாக என்ற எண்ணத்தில் அக்குடும்பத்தினர் நாராயணகிரியை அடைந்தனர். கஷ்டஜீவனம் நடத்தலாயினர். மனைவியும் மகளும் பயிர்வேலை செய்து குடும்பத்தை ஸம்ரக்ஷிக்க வேண்டி வந்தது வீரபத்திரனுக்குப் பெரும் வேதனையளித்தது.

இந்த வேதனையும் ஏக்கமும் ஒரு புறம்: காலில் துண்டிக்கப்பட்ட இடத்திலிருந்து தொடைவரை உள்ளே எலும்பைச் சுற்றி தாள முடியாத வலியினால் ஏற்பட்ட உபத் திரவம் ஒருபுறம். எல்லாம் சேர்ந்து அவனைப் படுத்த படுக்கையாய்ப் போட்டு, அவன் இரு ஜீவமணிகளை யும் கவலைக் கடலுள் ஆழ்த்தி விட் டன. "காலில் உள்காயரணம் ஆறு மல் புடை வைத்து விட்டது; நம்ம பக்கத்து வேதகிரி கிராமத்து முனு சாமி பண்டிதன் கிட்டே போனா இதுக்கு வேண்டிய பச்சிலை கிடைக் கும்" என்றார்கள் எல்லோரும். உடனே கவலையால் வாடியிருந்த



மாரியம்மா வயல் குறுக்கு வழியாக வேதகிரியை நோக்கி வரப்பு மீதே ஓடலானாள்.

*   *   *   *

வயல் நடுவேயுள்ள ஓர் கிணற்றில் கோபிநாதசாஸ்திரி ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். கிணற்றுக்கு வெகுசமீபத்தில் வரும்வரை அவளுக்கு அது எப்படித் தெரியும்? கிணற்றை அணுகிவிட்டாள். சாஸ்திரிகள் அவளைக் கண்டதுதான் தாமதம், வந்துவிட்டது அனர்த்தம். சாஸ்திரிகளின் சீற்றம் என்றால் அந்தக் கிராமத்திலேயே எல்லாருக்கும் பீதிதான்.

"பரம்பரை க்ரமமா வர தர்மத்தையெல்லாம் விட்டு உங்கப்பன் பண்ண அநியாயத்துக்குக் காலே பலி கொடுத்துட்டு திண்டாடறுனே, இன்னும் புத்தி வரலியோ? மூதேவி! இந்த வேரத்திலே நான் இந்தக் கிணத்திலே இருப்பேன்னு தெரியாதோ உன் பவிஷுக்கு? முழிக்கிற முழியைப் பாரு. நாளைக்கு சிரார்த்தம், இன்னிக்கி மடியா இருக்கவேண்டியது போக உன் தீட்டு வேறேயா! மண்டையை உடைச்சாதான் பாவமா?" என்று கர்ஜித்துக் கொண்டே கிணற்றங் கரையிலிருந்த ஒரு பெரிய மண்ணாங்கட்டியை வீசி எறிந்தார் ஆத்திரமூர்த்தி.

அவள் நெத்தியில் அது தாக்கியதால் ஏற்பட்ட ஓசையும், உடனே அது பொடிப் பொடியாய் உடைந்து தும்பாய்ப் பறந்து போனதும், அவள் 'ஹா' வென்றலறிக் கீழே சாய்ந்ததும் அந்தக் கோபமூர்த்திக்குப் பூர்ண திருப்தியளிக்க வில்லை. அந்தக் கொடிய ஹிருதயத்தில் களிவெறியே காணப்பட்டது.

மனக்கலக்கமும் பரபரப்பும் நிறைந்து ஓடிய அவளுக்குக் காத்திருந்தது இத்தகைய பரிதவிப்பு! பாவம்! இதுவும் அவன் திரு உள்ளம் போலும்!

---


## தற்போது கைவசமுள்ள வை. மு. கோ. நாவல்கள்.

| புதிய பதிப்புகள். | | | |
|---|---|---|---|
| 65. அமுதமொழி (கிளேஸ்) | 2—8 | 14. ஸாரமதி | 2—4 |
| ,, ,, (சாதா) | 2—0 | 59. வாத்ஸல்யம் | 2—0 |
| 66. பிரதிக்ஞை | 1—0 | 21. சோதனையின் கொடுமை | — |
| 62. பிரார்த்தனை | 1—0 | 51. உணர்ச்சி வெள்ளம் | — |
| 64. மலர்ந்த இதழ். பாகம் I. | 1—4 | 34. ராஜமோகன் | 1-12 |
| 11. வீரவஸந்தா | 1—0 | 43. கானல் நீர் | — |
| 46. வத்ஸகுமார் | 1—0 | 53. கருணாலயம் | 1—8 |
| 25. பக்ஷமாலிகா | 0—8 | 56. சுடர் விளக்கு | 0—8 |
| முன் பதிப்புகள் | | 24. ஜெயஸஞ்சீவி | 0—6 |
| | | 29. சுகுணபூஷணம் | — |
| 1. வைதேகி | 3—8 | 19. ஸரஸராஜன் | — |
| 58. ஞானதீபம் | 2—4 | 42. உளுத்த இதயம் | — |

இதுவரை வெளியாகியுள்ள 66-நாவல்களில் ஷை 21தான் தற்சமயம் கிடைக்கும். ஸ்த்ரீகளுக்கென்றே நந்தவனம் ருதுமலர்களும், குழந்தைகளுக்கென்றே பாலர்மோகினி மலர்களும் வெளியிடுவதால் தற்போது கைவசமில்லாத 45 புத்தகங்களும் புதிய பதிப்பு வெளியிட பேப்பர் கோடா இடமளிக்கவில்லை. தங்கள் தேவைக்கு மணியார்டர் செய்யவும்.

# 3. வேப்ப ஈர்க்கு கஷாயம்

கமலம் :—பாட்டி! வாருங்கள், நீங்கள் சொன்னதுபோல் செய்ததில் சொறிசிரங்கு எல்லாம் சீக்கிரத்தில் குணமாயிற்று. இப்போது குழந்தைக்கு ஜுரமாக இருக்கிறது! சின்னம்மைவிளையாடுகிருள். ஜுரம் விடவில்லை. குழந்தை வாய் பினத்துகிறது. என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறேன். பயமாயிருக்கிறது பாட்டி.

பாட்டி :—கமலம்! பயப்படாதே நான் ஒரு சின்ன கஷாயம் சொல்லுகிறேன். அதைப் போட்டுக்கொடு. ஜுரம் இறங்கிவிடும். வேப்பிலை ஈர்க்கு ஒரு பிடி எடுத்து மூன்று அறுப்பாய் அரிவாள்மணையில் அறுத்துக்கொண்டு உன் கையால் அரைபிடி மிளகு எடுத்து இதுகளை பாணலியில் போட்டு அடுப்பில் வைத்து நன்ருக வறுத்துக்கொள். வேப்ப ஈர்க்கு நன்ருக வறுப்பட்டதும் ஒரு சின்ன டீஸ்பூன் கருஞ்சீரகம் போட்டு பளபளவென்று வெடிக்கும்போது கால்படி ஜலம் விட்டு சுக்கு சித்தரத்தை கொஞ்சம் நறுக்கிப்போட்டு ஆழாக்குஜலமாகக் காய்ச்சி அதில் கால் ஆழாக்கு கஷாயம் வடிகட்டிக் கொடு. தினம் 2 வேளையாக இரண்டு நாளைக்கு கொடுத்தாயானல் அம்மையும் இறங்கிவிடும்; ஜுரமும் குறையும்.

சிலர் அம்மை புறப்பட்டு இருக்கையில் மருந்து கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிருர்கள். அது தப்பு. அம்மை சாமியாயிருந்தால் தேவலை. ராமகன் அம்மை அதாவது சின்ன அம்மை என்று இதைச் சொல்லுவார்கள். இது சில பேருக்கு மிகவும் மும்மரமாய் வந்து கெடுதல் பண்ணுகிறது. இதற்கு அவசியம் இந்த கஷாயம் கொடுத்தால் மிகவும் நல்லது. வேப்பிலை அம்மைக்கு மருந்து; ஆகையால் இந்த கஷாயம் கெடுதல் பண்ணுவது கிடையாது. இதைத் தவருமல் போட்டுக் கொடு. ஜுரம் சீக்கிரம் இறங்கிவிடும். இது என் சொந்த அனுபவத்தில் பார்த்தது; இதைச் செய்.

நெல்லுபொறியை பொறித்து பொறியில் நெல்லில்லாமல் பொறுக்கிவிட்டு அதை கஞ்சி செய்து வயிற்றுக்கு ஆகாரமாய்க் கொடு, வயிற்றிலிருக்கும் சுணையெல்லாம் கழிந்து மிகவும் சீக்கிரத்தில் குணமாய்விடும் அலக்ஷியமாயிருக்காதே— கடைசியில் அது நிமோனியா ஜுரத்தில் கொண்டுவிடும். நான் வீட்டிற்குப் போய்வருகிறேன். மஞ்சள் குங்குமம் கொடு,

---

## நந்தவனம்—இரண்டு பதிப்புகள்.

இனி நந்தவனம் இரு பதிப்புகளாக வெளி வருகிறது. உயரிய கிளேஸ் பதிப்பு வழக்கம்போல் 1—8—0. மலிவு அன்ப்ளீச்ட் பதிப்பு 1—2—0. வாசகர்களின் வேண்டுகோளின்படியே, அவர்களது சௌகரியத்தை உத்தேசித்தே இந்த மாறுதல். வழக்கப்போல் 112 பக்கங்கள்; பல அழகிய படங்கள். ஹேமந்தருது மலர் நீங்கள் படித்தாயிற்ரு? இல்லையேல் உங்களுக்குத் தேவையான பதிப்புக்கு முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

# --MICROBIC WORLD.--

# அணுஜீவ உலகமும், மானிட வாழ்க்கையும்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M.B., B.S., D.T.M.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

லூயிபாஸ்டூர் செய்துள்ள ஆராய்ச்சிகள் பொதுவாழ்க்கைக்கு இன்றியமையாத நன்மைகளை விளைத்தன.

இவர் கி. பி. 1822-ஆம் வருஷம் பிறந்தார். பாரிஸ் நகரில் ரசாயன சாஸ்திரம் கற்றுக் கீர்த்தி அடைந்தார். சிறு பிராயத்திலேயே இவருடைய நோட்டம் மிகவும் அற்புதமான வழிகளில் சென்றது. "இவர் முதலில் புளிக்காரங்களை வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர். புளிக்கார ஸ்படிகங்களில் (Crystals) ஒளியைச் செலுத்தியபோது அந்த ஒளி இரண்டு திசைகளிலே சுற்றுவதைக் கண்டார். இதைக்கண்டு ஒளியை வலப் பக்கமாகச் சுற்றும்படிச் செய்த ஸ்படிகங்களை வலச்சுற்று ஸ்படிகம் என்றும், ஒளியை இடப்பக்கமாகச் சுற்றும்படிச் செய்த ஸ்படிகங்களை இடச்சுற்று ஸ்படிகங்கள் என்றும் இரண்டு வகையாகப் பிரித்துக் கொண்டார். இந்த இரு வகைப் புளிக்கார ஸ்படிகங்களுக்கும் வெவ்வேறுன, வேற்றுமைகள் காணப்பட்டன. வலச்சுற்றுள்ள புளிக்கார ஸ்படிகங்கள்தான் வியாபாரத்திற்கு யோக்கியமான சுத்த ஸ்படிகங்கள். ஆனல் இவருக்கு இடச்சுற்றுப் புளிக்கார ஸ்படிகங்கள் ஆராய்ச்சிக்கு அகப்படவில்லை. இந்த இடச்சுற்றுப் புளிக்காரங்களைப்பற்றி நன்ருக ஆராய இந்த ஸ்படிகங்கள் எங்கே அகப்படும் என்று தேடிக்கொண்டிருந்தார். இதற்காகப் புளிக்கார ஸ்படிகங்கள் செய்யும் முறையைத் தெரிந்துகொள்ளப் புறப்பட்டார். சர்க்கரைப் பதார்த்தங்கள் எப்படி புளிக்கின்றன என்று ஆராயத் தலைப்பட்டார்.

பீர் பானம் தயாரிப்பது ஐரோப்பாவிலே ஒரு முக்கியத் தொழிலாக இருந்தது. இந்தப் பானத்தைத் தயாரிக்கும்போது சில சமயங்களில் இடக்கு முடக்குகள் ஏற்பட்டு வியாபாரிகள் திகைப்பதுண்டு. அந்தக் காலத்திலே பாஸ்டூர் அணுஜீவ சாஸ்திரத்திலே பிரக்கியாதி பெற்றவராக இருந்ததிலே, சில வியாபாரிகள் இவருடைய உதவியை நாடினர்கள். இப்படிப்பட்ட காரியங்களில் மிகவும் உற்சாகமுள்ள பாஸ்டூர் உடனே ஈஸ்டைப்பற்றி ஏற்கெனவே தெரிந்திருந்த விஷயங்களுக்கு மேலாக, பல புதியவிஷயங்களை ஆராயத் தொடங்கினர். நல்ல பீர் செய்வதற்குத் தேவையான உத்தம ஈஸ்ட் அணுக்களை பலவிதமான ஈஸ்ட் அணுக்கள் கலந்த நீரிலிருந்து பிரித்து எடுத்து வியாபாரிகளுக்குக் கொடுத்தார். பாஸ்டூருடைய மூளை ஒன்றிலிருந்து மற்றென்றிற்குத் தாவும் யூக சக்தி வாய்ந்தது. அக்காலத்திலே அணுஜீவன்கள் பல திரவ பதார்த்தங்களில் இருப்பதும் வெளியாயிற்று. அணுஜீவன்கள், மற்றொரு ஏதுவினல் உண்டாகாமல் சுயமாகவே உண்டாகின்றன என்ற கொள்கை ரொம்பத் தீவிரமாக எங்கும் பரவியிருந்தது. வேறொரு கட்சியார் கிளம்பி, 'அணுஜீவன்கள் சுயமாக உண்டாவதில்லை" என்

ரூர்கள். இரு கட்சியாரும் இது விஷயமாகத் தர்க்கங்கள் பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஆகவே, இந்த விஷயத்திலும் பாஸ்டுர் தம் நோக்கத்தைச் செலுத்தினர். அவர் ஈஸ்ட் அணுக்களின் ஆராய்ச்சிலே அணுஜீவன்கள் சுயமாக உண்டாவதில்லை என்ற தீர்மானத்திற்கு வந்த போதிலும், தமது முடிவான தீர்மானத்தை வெளியிடவில்லை. எவரும் மறுக்கமுடியாதபடி ஒப்புக்கொள்ளக்கூடிய அத்தாட்சிகளில்லாமல் எந்த விஷயத்தைப் பற்றியும் பேசத் துணியமாட்டார் பாஸ்டுர். இது இவரிடத்திலேகாணப்பட்ட விசேஷ குணம்.

இவர் திராக்ஷைப் பழங்களைக் காற்றிலுள்ள அணுத் தூசிகள் படாதபடி தயாரிக்கத் தொடங்கினர். பிஞ்சிலேயே திராக்ஷைக் குலைகளுக்கு தூசுபடியாத உறைகள் இட்டுக் காப்பாற்றினர்.

பழங்கள் பழுத்தவுடனே, அக்கினி—சுத்தம் செய்த பாத்திரங்களிலே சாறு இறக்கி, திராக்ஷ ரஸம் தயாரிக்கும் எந்த கட்டத்திலும், தூசி சம்பந்தம் ஏற்படாதபடி ஸகல பாதுகாப்புகளையும் கையாண்டு திராக்ஷரஸம் தயாரித்தார். இந்தத் திராக்ஷரஸம் வெகு நாட்கள் மட்டும் புளிக்காமலே இருந்தது. இந்தத் திராக்ஷ ரஸத்திலே சுத்தமான ஈஸ்ட்அணுக்களை புரையிட்டுப் புளிக்கவைத்தார். புளித்த ரஸத்தில் ஏராளமான ஈஸ்ட் அணுக்கள் உற்பத்தியாகிவிட்டன. பினபு பல விதத் திரவ பதார்த்தங்களைக் கொதிக்கவைத்துக் காற்றுப்படாத பாத்திரங்களில் அடைத்து, வெகு நாட்கள் மட்டும் கேடு வராதபடி காப்பாற்றினர். வாயுவில்தான் ஈஸ்ட் முதலான அணுஜீவன்களின் பீஜ அணுக்கள் இருக்கின்றன என்பதையும், வாயு சுத்தமாய் இருந்தால், நாம் காப்பாற்றும் திரவ பதார்த்தங்களும் சுத்தமாக இருக்கும் என்பதையும் ருஜுப்படுத்த, திரவபதார்த்தங்கள் உள்ள பாத்திரங்களை மவுண்டு பிளாங்கு (Mount Blanc) என்னும் மலை உச்சிக்கு வெகு பத்திரமாகக் கொண்டு போய் அக்கே திறந்து வைத்தார். அங்குள்ள சுத்தமான காற்றிலே திறந்து வைத்தபோதிலும் திரவ பதார்த்தங்களுக்கு கேடு வரவில்லை. இப்படிப் பலவாறு ஆராய்ச்சிகள் செய்து, அணுஜீவன்கள் சுயமாக உண்டாவதில்லை என்றும், உயிர் உயிரிலிருந்துதான் பிறக்கும் என்றும், அணுஜீவன்கள் அணுஜீவன்களிலிருந்துதான் உற்பத்தியாகின்றன என்றும் உலகத்தாருக்குசற்றேனும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் ருஜுப்படுத்தினர். இத்துடன் சுய உற்பத்தி வாதம் தலைகாட்ட முடியாமலே ஒழிந்தது.

வாயுமண்டலத்தில் அணுஜீவன்கள் இருப்பதை முதன் முதலில் அறிவித்தவர் ஆங்கில விஞ்ஞானியான டின்டல் (Tyndal) என்பவர். ஒரு இருட்டறைக்குள்ளே கூரையிலுள்ள கடுகளவு துவாரத்தின் வழியாகவாவது, சுவற்றிலுள்ள கடுகளவு துவாரத்தின் வழியாகவாவது வெளிச்சம் பிரவேசிக்கும்படிச் செய்தால், அந்த வெளிச்சம் ஒரு குழாய்போலக் காணப்படும். இதற்குக் காரணம், வாயுமண்டலத்திலே நிறைந்திருக்கும் திரிசரேணுக்கள் தான். இந்த ஒலிக்குழாய் கண்ணுக்குப் புலப்படாதபடி செய்வதற்கு ஒரு உபாயம் உண்டு. சாராயவிளக்கினல் (Spirit lamp) அந்த ஒளிக் குழாயில் அங்கங்கே உள்ள திரிசரேணுக்களை எரித்துவிட்டால், அந்தந்த இடங்கள்மட்டும் இடைவிட்டுக்

தெரியும். முழுக் குழாயையும் எரித்துவிட்டால், முழுவதும் மறைந்து போகும். இந்த அதிசயத்தைக் கண்டுபிடித்தவுடன் டின்டல் இதை ஒரு முக்கியமான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக்கொண்டார். ஒரு பாத்திரத்தில் திரவ பதார்த்தத்தைக் கொதிக்க வைத்தார். அதற்குள் செல்லும் வாயுவை ஸ்பிரிட் லாம்பினால் எரித்து, பின்பு, காற்று உள்ளே புகாதபடி மூடிவைத்தார். இப்படித் தயாரித்து மூடிவைத்த திரவ பதார்த்தம் வெகு காலமட்டும் கெட்டுப்போகாமல் இருந்தது. இப்படி எல்லாம் காப்பாற்றி வைத்தாலும்கூட சிலவேளை திரவபதார்த்தம் கெட்டுப்போயிற்று. இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்தார். எரித்த வாயுவிலிருந்து இந்த அணு தோஷம் ஏற்படவில்லை என்றும், கொதிக்கவைத்த நீரில் சாகாமலே சில அணுஜீவன்கள் இருந்தன என்றும் தெரியவந்தது. உடனே சாகாமல் தப்பிப் பிழைக்கும் அணுஜீவன்களையும் சாகடிக்க என்ன செய்யலாம் என்று யோசித்து, முடிவிலே, மூன்று நாட்கள் அடுத்தடுத்து மூன்று தடவை கொதிக்க வைத்துத் திரவ பதார்த்தத்தைக் காப்பாற்றின போது, அந்தத் திரவபதார்த்தம் கெட்டுப்போகாமல் இருந்தது. இந்த முறைக்குத்தான் டின்டல் முறை என்று பெயர்.

முதல் தடவைமட்டும் கொதிக்க வைக்கும்போது சாகாமல் தப்பிப் பிழைத்த அணுஜீவன்களுக்கு அணுபீஜம் ஸ்போர்ஸ் (Spores) என்று பெயர். நீர் கொதிப்பதற்குத் தேவையான உஷ்ணத்தில் இந்த அணுபீஜங்கள் சாகமாட்டா. இந்த அணுபீஜங்கள் சாதாரண உஷ்ணத்தை எதிர்த்துக்கொண்டு, வரட்சியைச் சகித்து உயிரை நெடுங்காலமட்டும் உள்ளடக்கிக்கொண்டு பிழைத்திருக்கும். மண்ணிலே விழுந்த விதைகள்போல, வளருவதற்குத் தேவையான மித உஷ்ணமும் ஈரமும் கிடைத்தவுடனே, மளமளவென்று பெருகத் தொடங்கிவிடும். டின்டல் முதல்தடவை கொதிக்க வைத்தபோது, பீஜ ரூபத்திலிருந்த அணுஜீவனைப் பரிணமித்தவை மட்டுந்தான் இறந்துபோயின. மறுநாள், முதல்தடவை கொதிக்கவைத்து மூடிய பாத்திரத்தில் பத்திரம் பண்ணின திரவபதார்த்தத்திலுள்ள அணுபீஜங்கள் ஸ்வயவளர்ச்சி பெற்ற சாதாரண அணுஜீவன்களாகின்றன. இரண்டாம் நாள் திரும்பவும் கொதிக்கவைக்கும்போது, புதிதாக வளர்ந்தவையும் மாண்டுபோய்விட்டன. இன்னமும் சில அணுபீஜங்கள் மிஞ்சியிருந்தால், அவையும் மூன்றாவது நாள் ஸஸ்ய வளர்ச்சிபெற்று அணுஜீவன்களானபோது, மூன்றாவது தடவை கொதிக்கவைப்பதினால் மடிந்துபோயின. இப்படிமூன்று நாட்களாக அடுத்தடுத்துக் கொதிக்க வைத்ததினாலே அணுஜீவன்களாக வளரக்கூடிய அணுபீஜங்களையும் நிர்மூலமாக்க முடிந்தது.


## சமீபத்தில் வெளியானவை

உதயசூரியன்—வை. மு. ஸ்ரீயின் முதல் நாவல்
இரண்டாவது கிளேஸ் பதிப்பு. 25 கலர் படங்களுடன் ரூ-1-4-0
பிரதிக்ஞை—வை. மு. கோ. 66-வது நாவல் ரூ. 1—0—0
15 அழகிய கலர்ப்படங்களுடன் உயரிய கிளேஸ் பதிப்பு.
நந்தவனம் ஹேமந்த ருதுமலர் படங்களுடன்
கிளேஸ் பதிப்பு. ரூ, 1—8—0 சாதா பதிப்பு ரூ 1-2-0

# ஸ்ரீரங்கப்பட்டணம்

எங்களுக்கோ கன்னடத்தில் அபார ஞானம். இரண்டே இரண்டு வார்த்தைகள்தான் தெரியும், அதாவது, ஸாகு, பேகு, அதுவும் குழந்தைப் பருவத்தில் பிருந்தாவன துவாதசியில் வனபோஜனம் சாப்பிட்டதன் பயனுக. அந்த இரண்டு வார்த்தைகளை உபயோகிக்கச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

காவற்காரன் "சடபட சடபட" வென்று மைசூர் யுத்தத்தைப்பற்றி மூச்சுவிடாமல் விவரித்தான். அதில் எங்களுக்குப் புரிந்த விஷயம், திவான் பூர்ணய்யாவைத் துரோகி என்று பலரும் கல்லால் அடித்து சுவரையே பள்ளமாக்கி உருத் தெரியாமல் அடித்திருந்தார்கள். அவர் ஏறியிருந்த குதிரைமட்டும் அழிந்தும் அழியாமலும் நின்றது. இதற்கு நேர் பின்புறமுள்ள மற்ருெரு தாழ்வாரத்தில் ஐம்பத்தாறு தேசத்து அரசர்களையும் சித்திரித்திருந்தது. அதனடியில் பெயர்கள் குறிக்கப்பட்டிருந்தால் சௌகரியமாயிருந்திருக்கும்.

காவற்காரன் இரண்டுமூன்றிடங்களில் 'இவர் அயோத்தி நவாப்பு. மகத தேசத்து மன்னன்' என்றெல்லாம் காண்பித்தான்.' முன்பு அங்கே காண்பித்தாயே என்ருல், இவர் இன்ெருரு அயோத்தி நவாபு. என்ருன். அவன் சொன்ன இன்ெருரு வரலாறு எங்களுக்கு ஆச்சர்யமாயிருந்தது. முதல் முதல் மைசூர் அரசரான உடையார் மிகவும் பெரிய கருதா மீசையுடன் காட்சி தருகிருர். அவருடைய சிலை ஸ்ரீ சாமுண்டேசுவரி சந்நிதியிலும், மைசூர்ஜகன்மோகனமஹாலிலுள்ள படங்களிலும் மீசை பிரமாதமாயிருக்கும். தற்பொழுதுள்ள மைசூர் மகாராஜா அவர்கள் கொழுப்பாட்டனின் அந்தமீசையைக் கௌரவிக்க விரும்பி, தமது இராணுவத்திலுள்ள கருதா மீசைக்காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து அதிகச் சம்பளம் கொடுக்கிருராம்! இது எந்தமட்டில் நிஜமோ!

* * *

## ஸ்காட் துரை பங்களா

இங்கிருந்து நேரே ஸ்காட் துரையின் பங்களாவிற்குச் சென்ருேம். இந்தப் பங்களாவை, சித்திரக்காட்சிசாலை (Mysore art gallery) என்று வழங்குகிருர்கள். காவிரியின் கரையை அடுத்து அழகிய பெரிய தோட்டம். தோட்டத்தின் ஒரு ஓரத்தில் சின்னஞ் சிறு வீடு. ஒரே ஒரு மாடிதான். வீட்டின் பின்புறம் காவிரி "ஹோ" வென்ற பேரிரைச்சலுடன், இரு கரைகளையும் அலைக் கைகளால் தொட்டுத் தொட்டு விளையாடிச் செல்லும். பின்புறத்துத் தாழ்வாரத்திலிருந்து நான்குபடிகள் இறங்கினல் பெரிய ஸிமெண்ட் முற்றம். அங்கிருந்து இருபுறமும் கைப்பிடிகளோடுகூடிய படித்துறை. நான்கு படிகளுக்கு ஒருமுறை அகன்ற தாழ்வாரம் போன்ற படி. மீண்டும் நான்குபடிகள். இப்படியே அமைந்திருந்தது அந்தப் படித்துறை. சாயங்காலவேளைகளிலே உட்கார்ந்து இன்பகரமாய்ப் பொழுது போக்குவதற்குரிய அழகுடன் சோபித்தது அந்த இடம். அந்த இடத்திலே, இயற்கையும் செயற்கையும் ஒன்றுசேர்ந்து மனங்கவரும் தன்மையதாய், ஆயுள் முழு

மையும் இங்கேயே கழித்துவிட்டால் என்ன? என்று தோன்றும்படி அமைந்திருந்தது.

பங்களாவின் முன் வாசலில் நீண்ட தாழ்வாரம். அதன் இரண்டு கோடிகளிலும் இரண்டு அறைகள். அவைகளுள் ஒன்றில் பல படங்கள் அழகாய் சட்டமிடப்பட்டு மாட்டப் பெற்றிருந்தன. அவைகளுள் முக்ய மானது திப்புவின் மரணக்காட்சி கண்டதும் கண்ணீர் ததும்பும் வண் ணம் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இளம்பிள்ளைகளான அவன் புதல் வர், சோகமே உருவெடுத்துவந்தாற் போல் அவன் மனைவி, ராஜபக்தி மிகுந்த ஒரு வேலைக்காரனோ அல் லது மந்திரியோ யாரோ ஒருவர், திப்புவின் பாதங்களிலே முகத்தைப் புதைத்தவராய் வீழ்ந்திருக்கும் காட்சி கல்நெஞ்சர்களையும் கரை யச்செய்யும்.

அதையடுத்து திப்புவின் புதல்வர் ஆங்கிலேயருடன் செல்லும் காட்சி முதலிய காட்சிகள்கொண்ட பல படங்கள். ஒவ்வொரு படத்தினடியி லும் அதைப்பற்றிய விவரமான தக வல்களும் குறிப்பும் வருஷம் மாதம் தேதி அப்பொழுது கவர்னராயி ருந்தவர்களின் கையொப்பமும் இவைகளோடு விரிவாகவும் தெளி வாகவும் அச்சிடப்பட்டிருந்தது. இவைகளைத்தவிரக் கீழே அதிக மான படங்களில்லை.

மாடியில் ஆங்கிலேயர் இந்தியா வுக்கு வந்தபிறகு நடந்த யுத்தங்க ளின் காட்சிகள், கவர்னர்கள், ராஜப்பிரதிநிதிகள், அவர்கள் செய்த சேவைகள், புரிந்த வீரச்செ யல்கள் முதலியவைகளைப் பற்றிய குறிப்புடன்கூடிய படங்கள் அனே கம். இவைகளைத்தவிர மைசூர் ஜகன்மோகன மஹாலில் உள்ள வைகளில் சரித்திர வீரர்களின் படங்கள் சிலவும், இன்னதென்றே விளங்காத பல படங்களும் நிறைந் திருக்கின்றன. இவைகளைத்தவிர முற்காலத்தில் உபயோகித்த வாள், வில், வேல் முதலியவைகளும் ஸ்காட்துரை உபயோகித்த ஆயுதங் களும் கண்காட்சிக்கென்று வைக் கப்பட்டிருக்கின்றன.

பங்களாவின் பின்புறத்துத் தாழ் வாரத்தில், காவிரிக் கரையின் எதி ரில் ஸ்காட்துரையின் படம் அந்த நாளை உடையில், நரைத்தும் கம்பீர மாகக் காணப்படும் "கிருதா" வுட னும் காட்சியளிக்கும். அந்தப் பங்க ளாவில் சூர்யாஸ்தமனத்திற்குப் பிறகு ஒருவரும் தங்குவதில்லையாம்! அந்தக் கதையை இங்கே சொல்லப் புகுந்தால் நீண்டுவிடும்.

அங்கே யாரை எந்த விஷயம் கேட்டாலும் கிடைப்பது ஒரேபதில் தான். கண்களைக் கொட்டையாய் விழித்து நம்மை ஏற இறங்க, ஏதோ ஒரு விசித்திரமான பிராணியைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள். அவர்கள் பார்வையிலிருந்து நமக் குத்தான் பைத்தியமா? அல்லது அவர்கள்தான் பைத்தியங்களா? என்று சந்தேகம் வந்துவிடும். கமலா என்னைப் பார்த்த பார்வை யில் எனக்கே நாம் கீழ்ப்பாக்கத்தி லிருக்கிறோமோ? என்று சந்தேகம் வந்துவிட்டது.

## சிறைச்சாலை

ஊருக்கு வெளியே சற்றுத் தொலைவில் ஏரிக்கரைபோல் தோன் றும் சற்று உயரமான ஓரிடம். எங்கள் வண்டி மெதுவாய் அவ்வி டத்தை அடைந்தது. வண்டிக்காரர் களைப்பற்றிப் பெருமையாய் நினைத் தோமே, எங்கேயோ அழைத்துப் போகிறானே என்று தோன்றிற்று. அந்த மண்மேடிட்ட இடத்தை நெருங்கியதும் வண்டி நின்றது

அவன் கீழே குதித்தான். "இறங்குங்கள் அம்மணி! இதுதான் "டஞ்சன்" என்ருன் அவனுக்குத் தெரிந்த மணிப்ரவாள பாஷையில். "இதென்ன? இதுவா சிறைச்சாலே. ஏரிக்கரை போலிருக்கிறதே என்று எண்ணிக்கொண்டே இறங்கினேம். அருகில் இரண்டு சுவர்களும் கேட்டும் இருந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கத்தக்க விதமாய் நின்று கொண்டிருந்தது. அதில் ஒரு கருங்கற்பலகையில் ஆங்கில எழுத்துக்களால் திப்பு தன்னிடம் பிணையாக விருந்த கைதிகளை இந்தப் பாதாள சிறையில்தான் வைத்திருந்தான். என்று குறித்து, வருஷம் மாதம் தேதிகளும் குறிக்கப்பட்டிருந்தன. அங்கிருந்து பத்தடி உயரமிருந்தது மண்மேடு. அதில் ஏறி நின்றபிறகு அங்கிருந்து ஒரு சிறு முற்றம். அதற்குள் இறங்கினுல் சிறு படிகள், மறு படி ஒரு பெரிய அகன்ற படி. அதன் கீழே இன்னும் நாலைந்து படிகள். அதன் அடித்தளம்தான் சிறைச்சாலே என்று விவரித்தான் வண்டிக்காரன்.

சிறைக்கூடம் என்பது பதினைந்து வளைவுகளாலாகிய கூடம், ஒவ்வொரு வளைவும் ஒரு தனி அறை எனலாம். மூன்று வரிசைகளாக வரிசைக்கு ஐந்து வளைவுகள், அதாவது ஒன்றன்பின் ஒன்ருக மூன்று அறைகள்போல் தோன்றும். இடையில் சுவர் கிடையாது. காரையாலாகிய அந்த வில்வளைவுகளின் தூண்களே அவைகளை அறைகள் போல் பிரித்தன. முன்பு வெளிச்சமோ காற்ரே நுழைந்திருக்கவே முடியாது. இப்பொழுது மத்தியிலுள்ள வளைவின் மேற்புறத்தை இடித்தும் ஒருபுறத்துச் சுவரில் மேற்பகுதிகளை இடித்தும் வெளிச்சமுண்டாகும்படி செய்திருக்கிருர்கள்; மற்றபடி ஒரே கும்மிருட்டு. அந்தக் குகையில் எதிர்ப்புறமுள்ள சுவரில் துவாரம் விடப்பெற்ற கருங்கல்கள். அவைகளிலே தான் கைதிகளை இருப்புச் சங்கிலிகளால் பிணித்துவைப்பார்களாம். தரையும் சுவர்களும், வளைவுகளும் சன்னகாரையினுல் வழுவழுவென்று பூசப்பெற்றிருந்தும் தாவடி வைக்கும் பொழுதே முள்ளிலும் கல்லிலும் நடப்பதுபோன்ற ஒரு கூச்சமுண்டாயிற்று. எத்தனை மனிதர்களின் கண்ணீர் சிந்தியிருக்குமோ? என்பதை எண்ண எண்ண எங்கள் மனம், என்றைக்கோ இருந்த ஊர் பெயர் தெரியாத தியாகிகளான வீரக் கைதிகளின் பொருட்டு அனுதாபம் கொண்டது. எங்களையும் அறியாமல் கண்ணீர் ததும்பிற்று.

## ஆடும் பாலம்

அங்கிருந்து நேரே 'டிஹாவ்ரா' என்பவர் கட்டிய ஆடும்பாலம் இருக்குமிடம் வந்து சேர்ந்தோம். சிலு சிலுவென்ற காற்று. இரண்டொரு தூற்றலும் போட்டது. ஆகவே அவசர அவசரமாய் அந்த அற்புதம் செய்த சிற்பியின் கைத்திறனைப் பார்க்க ஓடினேம். ஏற்கனவே அந்த பிரெஞ்சு இஞ்சினீயரின் திறமையையும், 150 வருஷங்களாகியும் இன்றே கட்டப்பெற்றது போல் தோன்றும் பல்லாரி மலைக் கோட்டையையும் பார்த்துப்பார்த்து அதிசயித்திருக்கிறேம். ஆகவே அந்தப்பாலம் விழுந்துவிட்டதென்றலும் அதைப் பார்க்கவேணுமென்று ஆவல்.

வண்டி அதன் எதிரே வந்துநின்றது. ஆங்கிலத்திலே டிஹாவ்ராவின் வளைவு என்று கொட்டைஎழுத்திலே பொறித்த ஒரு போர்டு. எதிரே ஒரு பெரிய செங்கலும் சுண்ணம்புங் கலந்தகுவியல். அது குவியல் என்ற

நம் சகோதரிகளுக்கு மட்டும்

# ஸ்த்ரீ தனம்

★

ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

நிற்க, ஸ்திரீக்குச் சொத்து ஏற்படும் மார்க்கம் என்னென்ன என்பதைப் பார்ப்போம். சுமார் 11 மார்க்கங்களைச் சாஸ்திரம் ஒப்புக் கொள்ளுகிறது. இவை வருமாறு:

(1) பந்துக்களிடமிருந்து கிடைக்கும் பரிசுப்பொருள்.

(2) அன்னியர்வழங்கும்பரிசுகள்.

(3) பாகப் பிரிவினையினால் கிடைக்கும் சொத்து.

(4) ஜீவனம்சத்திற்கு ஈடாகத் தரப்படும் சொத்து.

(5) வாரிசுரிமையாக வந்த சொத்து,

(6) கைத்தொழில் செய்து கிடைத்த தனம்,

(7) பேச்சு — ஒப்பந்தப்படி கிடைத்த தொகை,

(8) தானக எடுத்துக்கொண்ட சொத்து.

(9) ஸ்திரீதனத் தொகையால், ஸ்திரீதனச் சொத்தின்மீது கிடைத்த வட்டித் தொகையினால் வாங்கிய பொருள்.

(10) உயில் (Will) மூலம் ஒரு ஸ்திரீக்கு வந்த சொத்து,

(11) இது தவிர வேறு வழிகளில் வந்த சொத்து என்று ஸ்திரீதனச் சொத்து வழிகள் பல கூறப்படுகின்றன. எந்த வகையில் வந்த சொத்தானாலும், ஸ்திரீகளின் சொத்தை முதலில் இரண்டு பெரும் பிரிவாக,

(1) பூரண உரிமை உடையவை (Absolute),

(2) அனுபவ உரிமை மாத்திரம் உடையவை (Limited) என்று பிரித்துச் சொல்லவேண்டும்.

மனு முதலிய ஸ்மிருதி கர்த்தாக்கள் ஸ்திரீதனத்தைப் பின் வரும் முறைப்படி பிரித்துச்சொல்லியிருக்கிறார்கள்.

1. விவாக அக்கினி முன்பு வழங்கிய பரிசு (அத்யாக்கினி)

2, பெண் புருஷன் வீட்டுக்குப் போகும்பொழுது கொடுத்தவை— (அத்யவாகனிகா)

3. அன்பு — அடையாளமாகக் கொடுத்த பொருள்கள் (பிரீதிதத்தா, பர்த்துருதேயா)

4. பிரீதியினல், மாமனர், மாமியார் கொடுத்தவை. பெரியோர்களை

---

உருவத்திலில்லாமல் சமசதுரமாய் ஒரு மேடைபோல் நிறைந்துநின்றது. அதைச் சுற்றிலும் இரும்புக் கம்பிகளால் ஆன முள்வேலி. ஒருகாலத்தில் ஆடும் பாலம்என்று கௌரவம் பெற்ற அந்தக் கற்குவைகளோடு ஒரு நாள் பேசிப் பார்த்தால் அது எத்தனை அற்புதங்களைச் சொல்லுமோ? என்று எண்ணியவர்களாய் அருகே சென்று கலைக்கடவுளை வணங்கியவர்களாய்த் திரும்பினோம். நீங்கள் எப்பொழுதேனும் போனல் கட்டாயம் அந்தக் கற்களுடன் பேசிப் பாருங்கள்.

நமஸ்கரிக்கும்போது கொடுக்கப் பட்டவை.

5. தகப்பனர், தாயார், சகோதரன் அளித்த சொத்து.

6. தாய் வீட்டார், புருஷன் வீட்டார் கொடுத்த பரிசுகள் (அன்வதேயகா)

7. தாய் வழி தகப்பன் வழி— பந்துக்கள் கொடுத்தவை (பந்து தத்தம்)

8. மனைவியைப் புறக்கணிக்கும் போதோ, புருஷன் வேறு விவாகம் செய்துகொள்ளும் போதோ, நஷ்ட ஈடாகக் கொடுத்தவை (ஆதிவேதனிகா.)

9. பெண்ணுக்கு வரனல்கொடுக்கப்படும் சுல்கம்.

இவை அனைத்தும் ஸ்திரீதன வகையைச் சேரும் என்று பழைய ஸ்மிருதிகள் கூறுகின்றன.

விவாக காலத்தில் அக்னி சாக்ஷியாக வழங்கப்படும் பரிசுப் பொருள்கள், ரொக்கம்யாவும், ஒருஸ்திரீக்கு ஸ்திரீதனம் என்ற மரபுப்படி வந்த தனமாகையால், இதைச் சாஸ்திரம் 'சௌதாயிகம்' என்று சொல்லுகிறது. பூரண உரிமை உடைய சொத்து இதுவே.

மற்றைய ஸ்திரீதனத்தைத் தர்ம சாஸ்திரம், (Non-technical) சௌதாயகம் அற்றவை' என்று அழைக்கிறது. ஒரு ஸ்திரீயின் சொந்த சம்பாத்தியம், அவளுக்கு விவாகமான பிறகு அன்னியர்களால் அளிக்கப்பட்ட பரிசுப் பொருள்கள் யாவும் அவளுடைய ஸ்திரீதனம் என்ருலும் கணவன் அனுமதிக்கு உட்பட்ட பாத்யதையுடைய சொத்தாகிறது.

மூன்ருவதாக, ஒரு ஸ்திரீக்கு ஒரு ஸ்திரீயிடமிருந்து வார்சுரிமைக் கிரமப்படிவந்த சொத்து ஸ்திரீதனச் சொத்து என்று இருப்பினும், அனுபவ பாத்யதை மாத்திரம் உடையதாக இருக்கிறது.


பொதுவாக ஸ்திரீக்குச் சேர்ந்த சொத்து வகைகளையெல்லாம் தற்கால இந்து லாப்படி 'ஸ்திரீதனம்' என்று குறிப்பிட்டுச் சொன்னுலும், சொத்து வந்த வழி, வார்சுரிமை முறை, சொத்துரிமையின் அளவு இவைகளை ஒட்டியே ஸ்திரீதனச் சொத்தைப் பிரிக்க வேண்டியது சட்ட முறை.

ஒரு ஸ்திரீக்கு ஆண்களிடமிருந்து கிடைக்கும் சொத்து உண்மையில் ஸ்திரீதனச் சொத்தாகாது. அனுபவ பாத்யதை மட்டும் உடைய சொத்தாகவும், வார்சுரிமையில் வித்தியாசம் உள்ள சொத்தாகவும் இருக்கிறபடியால் அதை ஸ்திரீதனம் என்று சொல்ல முடியாது. தகப்பனரிடமிருந்து பெண்ணுக்கு வந்த சொத்தானுலும், ஸ்திரீதனச் சொத்தாகாது.

அதுபோலவே, மனைவிக்குக் கணவனல் கொடுக்கப்பட்ட சொத்து, ஒரு விதந்துவுக்கு பாகப் பிரிவினையின் காரணமாகக்கிடைத்தசொத்து இவைகளையும் ஸ்திரீதனச் சொத்து என்று கொள்ளமுடியாது.

தற்காலச் சட்டப்படி, 'அனுபவ பாத்யதை மாத்திரம் உடைய ஸ்திரீ சொத்து,' 'இந்து விதவைகளின், அனுபவ பாத்யதை மாத்திரம் உடைய சொத்து' என்றே இவைகளைக் கூறத்தகும். ஒரு தாயாருக்குப்பின், பெண்ணுக்கு வார்சுரிமை கிரமமாகவந்த சொத்து தாயாரின் ஸ்திரீதனச் சொத்தானுலும், பெண்ணின் பூரண உரிமை பாதிக்கப்படுகிறதினல், அதையும் ஸ்திரீகளின் சொத்து என்றே சொல்லத்தகும்.

அடுத்த இதழில், ஸ்திரீதனச் சொத்துரிமை விவரமும், வாரிசுரிமை விவரமும் விளக்கப்படும்.



ஸ்ரீரங்கப் பட்டணம்

★

தரியா தௌலத்

●

ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி கோயில்

★

போடோ: ஸ்ரீமதி கே. கல்பகம் கூனூர்.

# முக்கிய அறிவிப்பு

இவ்விதழில் மொத்தம் 56 பக்கங்கள் வெளியிட்டுள்ளோம். வேறொரு பக்கத்தில் தெரிவித்துள்ளபடி அடுத்த இதழில் சில புதிய அம்சங்கள் சேர்ப்பதால் 60 பக்கங்கள் வெளியிடப் போகிறோமென்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். நாளது சித்திரை இதழிலிருந்து அதிகப்படியான பக்கங்கள் வெளியிட முடியுமென எதிர்பார்க்கிறோம். வாசகர் சார்பாக சர்க்காருக்கு விண்ணப்பித்திருக்கிறோம்.

சென்ற இதழைவிட இவ்விதழில் பக்கங்கள் அதிகரித்திருந்தும் கட்டுரைப் போட்டி முடிவு வெளியிட இடம் அகப்படவில்லை. அடுத்த இதழில் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள் வெளியிடப்படும்.

மோகினி மேலட்டையின் கவர்ச்சியைப்பற்றியும், இதர நூதன அபிவிருத்தி அம்சங்களைப்பற்றியும் போற்றி எழுதியுள்ள அன்பர்களுக்கு எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

# பகைவர் வாழ்க!

சுத்தானந்தர்.

வாசல் இருந்தால் கொல்லையும் இருக்கும். உலகிலும் நல்லது பொல்லாது சேர்ந்தேயிருக்கும். ஒரு இடத்தில் மஹாத்மா பரம சாதுவாயிருக்கிறார். மற்றோரிடத்தில் போராக்கன் ராகெட் பாம் போடுகிறான். ஊரில் ஓரிடம் கெட்டிமேளம், மற்றோரிடம் அபசகுனக்கூச்சல் கேட்கிறது. இதே மாதிரியே நட்பும் பகையும் உலகில் எங்கும் நடமாடுகின்றன. பாண்டவர் ஐந்தேபேர், கௌரவர் நூறுபேர்... இருவருக்கும் நடுவே ஆயுதம் ஏந்தாமல் சாட்சியாகவேயிருந்து, அறத்தைக்காத்து அதர்மத்தை வீழ்த்திய அந்தக் கண்ணனை அக்காலம் அறிந்தவர் எத்தனை பேர்? ஏழெட்டுப்பேரே. கம்ஸ-துரியோதனாதி-அசுரப்படைகள் அவனை ஒழிக்கவே கத்தி தீட்டின.

ஸ்ரீ ராமாநுஜர் உயிருக்கே தப்பி மைசூருக்கு ஓடவேண்டியதாயிற்று. கூரத்தாழ்வார் தமது பக்திக்காகக் கண்ணையும் பறிகொடுக்க நேர்ந்தது. ஏசுநாதர் சிலுவையில் இரத்தம் சிந்த நேர்ந்தது. முஹம்மது நபி கல்லெறிபட்டு மதினத்திற்கு ஓடநேர்ந்தது. சைதன்யரின் சிஷ்யரான நித்யானந்தர் திவ்யநாம சங்கீர்த்தனம் பாடும்போது ஜகாய், மத்தாய் என்னும் கொடிய செல்வர் கையில் அடிபட்டு, மண்டை உடைய நேர்ந்தது. மகாத்மா காந்தி பகைவன் தடியடியால் பல்லுடைய நேர்ந்தது. சிறந்த கவிகளான ராஸீன், ஷேக்ஸ்பியர், மோலியர், ஹோமர் தாந்தே முதலியோர் பகைவரால் ஏளனம் செய்யப்பெற்றனர். தாந்தே உயிருக்கே ஊர் ஊராக ஓடி ஒளிய நேர்ந்தது. இப்படியே உலகில் மாசற்ற பெரியார்களெல்லாம் பகைவரிடம் வருந்தினர்கள். தாந்தேயும் ஹோமரும் தங்கள் பாடல்கள் ஒரு வரியைக்கூட அச்சில் பார்க்கவில்லை. அவர்கள் கவிதையைக் கேலி செய்தவர் பலர். போற்றினோர் நூறு ஆண்டுகளுக்குப்பிறகே வந்தனர். ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நூறாண்டுகளுக்குப் பிறகுதான் உருவாகி வெளிவந்தன. 'ஷேக்ஸ்பியர் என்ற ஆளே இல்லை. பேகன் எழுதியதே எல்லாம்' என்று இன்றும் வாதாடும் புலவர்களும் உண்டு. உலகில் மிகப் பெரியவர்களுக்கே மிகப்பெரிய பகைவர்கள் முளைக்கிறார்கள். இராமனுக்கு இராவணன் வருகிறான். மந்திரி ராஜாஜியைச் சுற்றி யெழுந்த இந்திப்போர்ப் புயலைப் பார்த்தோம். அக்காலம் ராஜாஜியைப் புகழ்ந்தவர்களே பிற்காலம் அபிப்பிராயபேதத்தால் திட்டிக்கொண்டிருந்தனர்! இதையறிந்த மேதாவியாதலால் இசை வசை இரண்டையும் பொருட்படுத்தாமல் அவர் பொதுநலம் செய்கிறார்.

இப்படியே பார்த்தோமானால், நம்மைச் சுற்றிலும் கொந்தளிக்கும் பொறாமைப் புயலால் நாம் வருந்தமாட்டோம். இருவிகார மனத்தில் மனிதன் வசிக்குமட்டும், விருப்பு வெறுப்பாகிய இரண்டு குணங்களும் காமக்குரோதலோபமோக மதமாச்சர்யங்களும் சுழன்றடித்து சமாதானத்தைக் களைந்தே வரும். பகைகொண்ட, பொறாமைகொண்ட எந்த மனதும் நிம்மதியடையாது, யார்மேலாவது பாய்ந்துகொண்டிருக்கும். அதிலும் சாதுக்கள்மேல் பாயக் கேட்கவேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் எல்லாம் பொறுக்கவல்லவர்கள், துளசிதாஸர் தமது ராமாய

ணத்தில் சாதுக்களை வணங்கியபிறகு துஷ்டப்பகைவரையும் வணங்கு கிறார்:—"துஷ்டர்களையும் வணங்குகிறேன். அவர்களாலேதான் நல்லோர்களின் பொறுமையும் பெருமையும் உலகிற்கு விளங்குகிறது. நல்லோர் எனது காவியத்தை உணர்ந்து பருகுவர். பொல்லோர் அவமதித்துக் கேலி செய்வர். ஏன்? அவர்கள் உள்ளத்திலும் கவிதையிலும் உள்ள ராம ரஸத்தை அறியவில்லை. அறிந்தால் அவர்களும் வம்பு பேசாமல் பருகலாம். இருந்தாலும் உலகத்தில் நல்லதை அறிந்து போற்றுகிறவர்கள் மிகச் சிலரே. பொறுமைகொண்டு தூற்றுகிறவர்களே மிகப் பலர். ஒரு குயிலை ஒரு கூட்டம் காக்காய்கள் ஏளனம் செய்தால் குயிலிசையின் இனிமைக் குக்கேடாகுமா? அந்த இனிமையை ரசிக்கத் தெரியாதவர்கள் தூற்றட்டும். மனமே! நீ ராமாமிருதத்தைப் பருகி, உன் கவிதையை அவனுக்கே அர்ப்பணமாக்கிவிடு"

கலைஃபின் ஆதர்சம் இதுதான். வங்கத்தில் தாகூரின் கவிக்கு எத்தனை எத்தனையோ எதிர்ப்புகள் இருந்தன. நோபல் வெகுமதிக்குப் பிறகே பண்டித பரிஷத் அவரை மதித்தது. பிறகுகூட குற்றம் சொல்லுவோர் இருந்தனர். நாமெல்லாம் உலகில் வழிப்போக்கர்போல் வந்து கூடியிருக்கிறோம். இந்தச் சத்திரத்திண்ணை யாருக்கும் நிலையோ சொந்தமோ இல்லை. இதிலிருக்கும் நூறு விநாடியில் அன்பாயிருந்து செல்லலாம். அவரவர் கடமையைச்செய்து மற்றவர்கள் அருமை பெருமைகளையும் மதித்து நடக்கலாம். பிறர் குணங்களைக்கூடக் குற்றமாகக்கொண்டு, பகையாடுவோர் காலத்தையே வீணுக்குகிறார்கள். பகையால் தங்கள் மனதையே கெடுத்துக்கொள்ளுகிறார்கள். சாதுக்கள் எதிலும் பற்றில்லாமல் தங்கள் கருத்தையும் பலனையும் பகவந்நிவேதனம் செய்து செல்லுகிறார்கள். வெறுப்பும் பகையும் அமைதியைக் கெடுத்து நரம்புகளைத் தளர்த்தி அறிவைக் கலக்கி ஆளை நலிக்கும் கொடிய விஷங்களாகும். உலகம் இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் சாதுக்களுக்கு ஒரு விசனமும் இல்லை. இகழ்ச்சியும் புகழ்ச்சியும் இரு விகார மனதிற்கே. நிர்விகாரிகளுக்குக் குண தொந்தபந்தங்களில்லை. கம்பனை இன்று சிலர் உச்சிமேல் வைத்துக் கொண்டாடுகிறார்கள். கம்பனை எரிக்கவேண்டுமென்றும் சிலர் கிளர்ச்சி செய்கிறார்கள். கம்பனையும் பெரியபுராணத்தையும் குறளையும் எரித்து விட்டால் தமிழருக்குச் சுயமரியாதை வந்துவிடும் என்று சிலர் மேடையில் பேசுகிறார்கள். இவற்றால் அக்கவிகளுக்கு மாசில்லை. "ஐயா! கள்ளுக் குடிக்காதே' என்றால், நீயார் கேட்கிறவன் முட்டாள்! நீ தண்ணீர் குடிக்காதிரு பார்ப்போம்"...என்று குடிகாரன் எதிர்க்கிறான். உலகில் எதற்கும் விதண்டாவாதமும் போட்டியும் உண்டு. அதிலும் இலக்கியத்துறையில் பொறுமைச்சிலம்பம் அதிகம். உலகப்புலவர் வாழ்வைப் பார்த்தால் தெரியும். மஹாகவி ராஸீன், விட்மன், மோலியர் முதலிய பெரியார் வரலாறுகளில் இந்தச் சிலம்பத்தைப் பலமாகக் காணலாம். ஏதோ நமக்குரிய கடமையை நாம் அடக்கமாகச் செய்து செல்வோம். பகைவர் என்பவர் யார்?...நமது அன்பை இன்னும் அறிந்துகொள்ளாத நேயர்களே...நாம் அவர்கள் அன்பை அறியும்படி இறைவனை வணங்குவோம்...எல்லோரும் நன்றாக வாழட்டும்.

பகைவர் பகைவர் என்னும் அண்ணமாரே.
பலமுறை வாழ்த்துகின்றேன் அண்ணமாரே
இகலும் இனிய நட்பும் இந்த உலகின்
இரவும் பகலும் போலாம் அண்ணமாரே...

புகழும் வசையும் சமம் என்று புகல்வோர்,
புன்னகை புரிதவார் இன்னலைக்கண்டே.
சிகையெழும் விளக்கினைச் சேறுமோ விட்டில்?
செஞ்சுடரை மலைப்பாம்பு தின்றுவிடுமோ?

நூறுதலைப் பகையின்றிப் பாரதம் உண்டோ?
நொண்டிச்செனி யின்றி நளன் காதையும் உண்டோ?
கூறுசெய்யத் தசமுகக் கொடிய னின்றிக்
கோதண்ட ராமனிசை கூறுவதுண்டோ?

மாறுசெய்யும் கம்ஸனின்றி மாதவனுண்டோ?
மாரனின்றி நெற்றிவிழி மாண்பறிவோமோ?
வேறுபட்ட சூரபத்மன் வீண்செருக்கின்றி
வீரவடி வேலனுக்கு வேலையும் உண்டோ?

---

# சித்திரச் சோலை

ஸ்ரீ. ராகவனது சித்திரக்கலை மோகினியைச் சித்திரச் சோலையாக்கி விட்டதென ரஸிகர்கள் மெச்சுகிறார்கள். பாசுரங்களும் கீர்த்தனைகளும் கவிக் கனவுகள்: அவைகளைச் சித்திரக் கற்பனைகளாக மோகினி வாசகர்களுக்கு அளிக்க முன்வந்துள்ளது கலா ரஸிகர்களுக்கும், பக்தர்களுக்கும் நிகரற்ற உத்ஸாகத்தை அளித்துள்ளது கண்டு பூரிக்கிறோம்.

ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டே மோகினியின் ஓவிய அலங்காரம் அமைக்கப்படுகின்றதென்பது யாவரும் அறிந்ததே. மோகினியின் படங்கள் முக்கியமாக மூன்று கருத்துக்களைக் கொண்டவை:-

(1) நமது பாரத தர்மத்தைக் காத்து மகோபகாரம் செய்த பரமாசாரியர்களின் திருவாக்குகளை விளக்குதல்.

(2) கலையின் தெய்வத்தன்மையை விளக்கி வாசகர்களுக்குத் தார்மீக உணர்ச்சியை உண்டாக்குதல்.

(3) காலக்கண்ணாடியான நடையுடைபாவனைகளைத் திருத்துதல்.

# அடுத்த இதழிலிருந்து

அடுத்த இதழிலிருந்து கம்பராமாயணத்தை வரிசையாகக் கதைப் போக்காகச் சித்திர விளக்கத்திற் காட்டத் தீர்மானித்திருக்கிறோம். அத்துடன் நமது பக்தி மார்க்க மணிகளான ஆழ்வார்களின் பாசுரங்களைக்கொண்டு தெய்வ தத்துவங்களை விளக்குவோம். தாஸம், சக்யம், வாத்ஸல்யம், மதுரம், சாந்தம் முதலிய பக்தி பாவனைகளுக்கேற்றபடி ஆழ்வார் வாக்குகளைக் குறிப்புடன் தருவோம். வழக்கம் போல், மானிட வாழ்வின் ஆதர்ச விளக்கமாயிருக்கும் சுத்தானந்தக் கவிதை மேலட்டைப்படமாக வெளிவரும்.

-ஆசிரியை

# மலர்ந்த இதழ்

33

ஆநந்தமயமான மாலைநேரம். எங்கும் பக்ஷி இனங்கள், தம் இன்னிசை கீதத்தை உலகோருக்கு அம்ருதம் போல் அள்ளி வீசி ஆரவாரம் செய்கின்றன. இந்த அத்புத இயற்கையானந்தத்தை பரந்தவானத்தின் கீழே ஆநந்த ரூபியாய் உட்கார்ந்து பருகியவாறு இருக்கையிலும் அடிக்கொரு பெருமூச்சும் முகத்தில் சோர்வும் மட்டும் பாதித்துக் கொண்டே இருப்பதால் சற்று மரத்தில் சாய்வது, மீண்டும் தலைநிமிர்வது, ஆகாயத்தை நோக்குவது, வெளிப்புறப், யார் வரவையோ எதிர்பார்ப்பது. இம்மாதிரியான விநோத உணர்ச்சி





யுடன்உட்கார்ந்திருந்த அமராபாயை அவளறியாதவாறு ஆஸ்பத்திரி மெத்தை வராண்டாவில் நின்றபடியே இமைஇசைக்காமல் கோகுல்நாத் பார்த்துக் கொண்டு நிற்பதை அப்பேதை எப்படியறிய முடியும்?

"ஆறு மணிக்கெல்லாம் வருவதாகச் சொல்லியவள் மணி 7 அடிக்கப்போகிறது. இன்னும் ஏன் வரவில்லை ஒருகால் மறந்துவிட்டாளோ! ...ஆம்... இருந்தாலும் இருக்கலாம். புதியபட்டமும் புகழும் பெற்றிருப்பதால் எத்தனை சினேகிதைகள் வீட்டில் விருந்தும் உபசாரமும் நடக்கிறதோ! அந்த ஆநந்த உணர்ச்சியில் இதை அடியோடு மறந்துவிட்

டாலும் அது வியப்பில்லை...என்னைப்போலவா ரோகமும் கலக்கமும் கொண்டு இப்படி கிடப்பார்கள்?''

என்று சலிப்பாக எண்ணியவளாய் உட்கார்ந்திருக்கையில் "உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார்கள்." என்று ஒரு தாதி வந்து அழைத்துச் சென்றாள். மணிமேகலைதான் வந்துவிட்டாள் என்ற குதூகலத்துடன் விஸிடர் வரும் ஹாலுக்கு விரைந்து ஓடினாள்.

அங்கு அழகே உருவாய் ஒரு யுவதி உட்கார்ந்திருந்தாள். அமராவைக் கண்டதும், "ஹலோ... வாம்மா...என்னைத் தெரிகிறதா!'' அன்று வந்திருந்தேனே... நாளைக் காலையில் உன்னை எங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று தீர்மானம். அதை முன் கூட்டி உன்னிடம் தெரிவிக்கும்படி அம்மா சொல்லியனுப்பினாள். நாளைக்குதான் அண்ணா வீட்டிலேயே இருப்பானம். டாக்டரிடம் உத்திரவு வாங்கியாகிவிட்டது. காலை 7 மணிக்குத் தயாராயிரு......என்ன யோசனை செய்கிறாய்?'' என்றாள்.

அமராபாயின் ஏமாற்றம் ஒரு புறம் என்றால் அதிர்ச்சியும் ஒரு புறம் பாதிப்பதை மெல்லச் சிரமப்பட்டு மறைத்துக்கொண்டு "அப்படியா! நாளைதினம் எனக்கு முக்யமான சிநேகிதை வருவதாகச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறாள். அதனால் தான் யோசிக்கிறேன். நாளைய மறுநாள் நீங்கள் வைத்துக் கொள்ளலாமே.... என்றாள்.

வந்தவள்:—ஓ! அதைப்பற்றி நீ யோசிக்கவேண்டாம். உன் சிநேகிதையையும் அங்கேயே அழைத்து வரும்படி நாங்கள் ஏற்பாடுசெய்து விடுகிறோம். நீ உனது சொந்த வீட்டிலிருப்பதுபோல் அவளிடம் சந்தோஷமாக இருந்து அவளையும் நம்முடன் விருந்துக்கு வைத்துக் கொண்டு அனுப்பலாம். நாளைக் காலையில் அண்ணா வே கார் கொண்டுவருவான். நீ கட்டாயம் வந்துவிடு. கூட நானும் வரவேண்டுமா! அப்படியானால் சொல்லிவிடு... இக்காலத்தில் இப்படி கேட்பதே அநாகரிகம் இல்லையா!''...என்று கூறியபடியே அவள் கன்னத்தில் அன்பு மயமான உணர்ச்சியுடன் கிள்ளித் தட்டினாள்.

அமராபாயிக்கு அந்த வார்த்தையும் செய்கையும் மிக்க வேதனையை உண்டாக்கின என்பதை அப்பெண் மணி எப்படி உணரமுடியும். அமரா ஏதோஒருவிதமான அசட்டுச் சிரிப்பு சிரித்தாளேயன்றிப் பதிலே சொல்லவில்லை. அவள் நெஞ்சில் பெரும்பாறை அழுத்துவதுபோல் ஏதோ ஒரு கலக்கம் அழுத்துகிறது. பெருமூச்சும் சிறுமூச்சுமாக வருவதைச் சமாளித்துக் கொண்டு ஒருவாறு சிரித்து வழியனுப்பிவிட்டு ஆவேசப் பதுமைபோல் தன்னறைக்கு வந்தாள்

இதுகாறும் உள்ளே அடங்கிக் கிடந்த துக்கம் அவளால் சமாளிக்கவேமுடியாமல் பொத்துக்கொண்டு வந்துவிட்டதால் கதவையும் சாத்திவிட்டுத் தன் ஆத்திரம் தீர நன்றாக அழுதாள். முகமும் கண்களும்கூட சிவந்து வீங்கிவிட்டன. "சீச்சீ! இதென்ன உலகம்! இதென்ன சமூகம்? நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று... இந்த தர்ம சங்கடமான நிலையை என்னால் சகிக்கவே முடியவில்லை. ஆஸ்பத்திரியில் கிடக்கும் எனக்கு கல்யாணத்திற்குத்தானா அவசரம் அடித்துக்கொண்டு போகிறது? ஏன் இந்த அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மூளையே இல்லை? நாவல்களில் வருவதுபோல் காதலித்தவன் ஒருவன்; கைப்பிடிப்பவன் ஒருவன்

...பிறகு சங்கடவாழ்க்கை...தற்கொலை...அல்லது விபரீதமாக ஓடி விடுவது...சீச்சீ!...இதென்ன வெட்கக்கேடு. என் கதியும் அப்படியா முடியப்போகிறது. இதை நான் யாரிடம் கூறுவது?

முதலில், அந்த மனிதனே எமகாதகப் பேர்வழியாகவன்றோ இருக்கிறார். என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்ளன் தன் உள்ளத்தை ஒரு திவலைகூடக் காட்டவில்லையே! இத்தகைய மூடுமந்திரத்தில் நான் எப்படி இந்த ரகஸ்யத்தை மனம்விட்டு என் தகப்பனரிடம் கூறுவது...நாளை வேறு அங்கு போகவேண்டுமாம்...இதென்ன சோதனை...எனக்கு உடம்பு சரியில்லை வரமுடியாது என்று கடிதம் எழுதிவிடலாமா...அல்லது என் கல்யாணத்திற்கு முழுகிவிட்டதுபோல் ஏற்பாடுசெய்த வேடிக்கைப் பார்க்கும் அந்த டாக்டரிடந்தான் மானத்தைவிட்டுச் சொல்லிவிடலாமா... சீச்சீ!...எப்படி அவரிடம் சொல்வது? இத்தனை காலமாக மிக்க கண்ணியமான பெயரெடுத்துள்ள என் பிதாவுக்கு என்னுடைய இச்செய்கை பங்கத்தையல்லவா விளைவிக்கும்? அதனுல் அவரது மனது நொந்தால் அது எனக்குத்தானே கெடுதி...

இப்பொழும் வ்யாதி எனக்கேன் வந்தது...நான் ஏன் இந்த இடத்திற்கு வரவேண்டும். எங்கேயோ கிடந்த நான் இங்கு வருவானேன். அந்த உத்தம சூரியனைக்கண்டு என் மனமாகிய தாமரை மலர்ந்து நிமிடத்திற்கு நிமிடம் ஆநந்தத்தை அள்ளிக்கொடுத்து என்னைப் பைத்யமாக்குவானேன். மலர்ந்த இதழுக்கொப்பான என்னுடைய இதயம் குவிந்து வாடி வதங்கிக் சுருகிப் போகவா போகிறது...இதுதான் விதி. விதி... என்று அடித்துக் கொள்ளுகிறார்களே அந்த விதியோ! அட க்ரகசாரமே! இதற்கு நான் என்னவிதம் பரிகாரம் தேடுவேன்?''

என்று மனது உடைந்துபோய் சற்று தவித்தாள். கோகுல்நாத்தினிடமே தன் அந்தரங்கத்தை வெளியிட்டு விடலாமா! என்றும் ஒரு ஆவேசம் தோன்றியது. ஒரு பெண் பிள்ளை வலிய தானகத் தன் மனத்தை வெளியிடுவதால் அவர் என்ன நினைப்பாரோ! ஒருவேளை மதிப்புக் குறைவாய் கேவலமாக எண்ணிவிட்டால் என்னசெய்வது?'

என்று மனது ஒருவகையில் நிற்காமல் தத்தளிக்கையில், சாப்பாட்டைக் கொண்டுவந்து மேஜை மீது வைத்துச் சென்றார்கள். அதைத் திறந்து பார்ப்பதற்கும் பிடிக்காமல் மவுனமே உருவாகப் படுத்திருந்தாள். இவளுடைய பொறுமையை சோதனை செய்வது போல் அந்தி நேரத்து கானமழை பொழியத் தொடங்கி கம்பீரமாக உஸேனிராக ஆலாபனம் ஆரம்பமாயிற்று.

ஜஞ்சாமிருதம்போன்ற அக்குரலைக் கேட்ட உடனே அது கோகுல்நாத்தின் தீங்கனிக் குரல் என்பது தெளிவாக விளங்கியது. ஏற்கனவே இதயக் கடலில் ஆநந்த அலைகள் ஒருபுறம் மோதிக்கொண்டிருந்தன. இத் தீங்குரலின் இனிய மதுர கீதத்தைக் கேட்டதும் பூர்ண சந்திரனைக் கண்டு கொந்தளிக்கும் அலைபோல் நிர்த்தனம் செய்யவாரம்பித்தது.

உசேனிராக ஆலாபனத்திற்குப் பிறகு அதே ராகத்தில் "நே தாளலேனுரா! நின்னுஜூடகனு" என்கிற கீர்த்தனத்தை வெகு இனிமையாகப் பாடுவதைக் கேட்கக் கேட்க அமராபாயின் அவஸ்தைக்கு தூபம் போடுவது போலாகிவிட்டது

ஆனந்தக் கண்ணீர் பெருக அப்படியே மவுனப் பதுமைபோல் வீற்றிருந்தாள்.

சங்கீதமே வயிறு நிரம்பிவிட்டதால் ஆகாரத்தைத் தொடவே இல்லை. தான் நாளை அங்கு செல்வதற்குமுன்பு ஒருமுறை கோகுல்நாதனைப் பார்க்காமல் இருக்கவே முடியாதுபோல் தோன்றியதால் எப்படியாவது பார்த்துவிட்டுத்தான் போவது என்கிற தீர்மானத்திற்கு வந்தாள்.

சாப்பிட்ட தட்டை எடுத்துச் செல்லவந்த தாதி சாப்பாடு அப்படியே இருப்பதைக் கண்டு வியப்புடன் "சரி... பிறகு வருகிறேன்" என்றுகூறியவாறு போய்விட்டாள். சாப்பாட்டை ஏதோ ஒருவாறு கிளறிவிட்டு மறுபடியும் உட்கார்ந்தாள். படுத்தாள். உலாவினாள் இருக்கை கொள்ளவில்லை. "தகப்பனாரிடம் நேரில் சொல்வதற்கு அச்சமாயிருப்பதால் கடிதம் எழுதித் தெரிவிக்கலாமா!" என்று எண்ணி மேஜையருகில் சென்று கடிதமெழுதினாள்.

எழுதியதை மீண்டும் படித்தாள். உடனே கிழித்தெறிந்தாள். 'ஏன்! நாம் அவருக்கே எழுதினால்?' என்று ஒரு க்ஷணம் யோசித்தாள். தன் மனது விரும்பிய விதமெல்லாம் காதல் கடிதங்கள் எழுதுவதும் கிழிப்பதுமாய் பித்து பிடித்தவள் போலானாள். அதுவும் மனத்திற்குச் சமாதானமாகவில்லை.

மணியோ தன் கடமையைச் செய்துகொண்டே போகிறது. டாங்கென்று 2 முறை அலறியபோதுதான் இத்தனை நேரமாகிவிட்டதா என்கிற வியப்பு உண்டாகியது. தான் எழுதிக் கிழித்த குப்பைக் காகிதங்கள் ஒரு கூடை நிறைந்துவிட்டதை நோக்க அவள் இதயத்தில் நிராசையும் ஏமாற்றமும் குடிபுகுந்து வதைத்தன. "சீ! பெரியவர்களாகத் தேடிச்செய்யும் காரியத்திற்கு இரண்டகம் கூறி மறுப்பது இத்தனை படிப்பு படித்த எனக்கு அழகாகுமா! பெரியவர்களைத் வேஷித்துக்கொள்வதா முறைமை" என்று ஒருபுறம் தானே எண்ணுகிறாள். பெரியவர்களுக்காக என்னுள் பூராவும் நான் அவஸ்தைப்பட்டுச் சாகவேண்டுமா! இதென்ன வழக்கம்! ஏன் நான் என்னுடைய நன்மைக்காக இன்னொரு காரியம் செய்யக் கூடாது? மனக்கசப்புடன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு தர்மத்திற்கும் நியாயத்திற்கும் விரோதமாய் வாழ்க்கை நடத்தி பாபக்குவியலைத்தேடிக் கொள்வதை விட என்னை எவன் மணக்க வருகிறானோ அவனிடமே "நான் உன்னைக் காதலிக்கவில்லை; உலகத்திற்கு வேஷம் போடவே உன்னை மணக்கப் போகிறேன். என்னிதயத்தைக் கொள்ளை கொண்ட சுந்தர புருஷனுக்குத்தான் என்னிதயம் அடிமையாகி விட்டது. பிறகு வாழ்க்கையின் கசப்பும் கரடுமுரடும் இருப்பதைப் பற்றிப் பேசி பயனில்லை. என் உண்மை ரகசியத்தை உடைத்துக் கூறிவிட்டேன்" என்று நான் ஏன் ஒரு கடிதம் எழுதி ரகசியமாய் அவனிடமே கொடுத்துவிடக்கூடாது?

ஏன்? இவைகளை எழுத்து மூலம் வைப்பதைவிட சமயம் நேர்ந்தபோது ஏன் நேராகவே சொல்லக் கூடாது? மணந்த பிறகு இந்த ரகஸியம் தெரிந்தால் ஆபாஸமாயும் அவமதிப்பாயும் ஆகிவிடுமல்லவா! அத்தகைய இழிவைத் தேடிக்கொள்வதைவிட முதலிலேயே சொல்லிவிடுவதுதான் உத்தமம். அதுநன்மையை விளைவித்தாலும் சரி! தீமையை

விளைவித்தாலும் சரி! என் தலைவிதி விட்ட வழியாகட்டும். இந்த தீர்மானத்தின்படி செய்தேமுடிக்கிறேன்" என்கிற பலமான அஸ்திவாரம் போட்டு உறுதியான கட்டடத்தை எழுப்பிக் கொண்டாள். அதன் பிறகே அவள் மனத்தை மலைபோல் அழுத்திக் கொண்டிருந்த பாரம் சற்று குறைந்ததுபோல் தோன்றியது.

## 34

வழக்கம்போல் உதயகீதம் பாட ஆரம்பிப்பதற் குள்ளேயே அமராபாய் வழக்கத்திற்கு விரோதமாய் எழுந்து குளித்து விட்டு வெகு அழகாக அலங்கரித்துக் கொண்டு ஜம்மென்று உட்கார்ந்து மணியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். உதய கீதம் ஆரம்பமாயிற்று. இரவு முற்றும் தூக்கமென்பதே இல்லாததால் கண்கள் இடுங்கியும் கலங்கியும் இரப்பைகள் தடித்தும் இருந்தன.

நீலநிறப்பட்டாடையை அணிந்து ரோஜா புஷ்பத்தைக் கொத்துடன் பறித்து சிகையில் சொருகியிருக்கும் அழகு அவளை இதுவரையிலில்லாத ஒரு புதுமை யுலகத்தின் அத்புத பிம்பமாகவே காணச் செய்தது. தனக்குள்ள உணர்ச்சி வெறியில் தான் தீர்மானித்துள்ளபடி விஷயத்தை நேரில் தெரிவித்தால் வார்த்தைகள் தாறுமாறாக உளறிவிடும் என்கிற பயத்தால் சுருக்கமாகத் தனது கருத்தை அழகாகவும் பொருக்குமணியான வார்த்தைகளாலும் எழுதி அதை வெகு ஜாக்ரதையாகத் தனது பர்ஸுக்குள் வைத்துக்கொண்டாள்.

வழக்கம்போல் காலை ஆகாரம் வந்தது. உடனே தர்மாமீட்டர் பார்க்கும் நர்ஸ் வந்துசென்றாள். "இன்னும் கார்வரவில்லையே! எப்போது கார் வரும்? எப்போது இக்கடிதம் அவன் கைக்குப்போகும்?" என்கிற ஒரே தீர்மானந்தான் அவளுடைய முக்ய காரியமாகத் தோன்றியது. காலை வரவேண்டிய மருந்து இன்னும் வராததால் காப்பிசாப்பிடாமல் உட்கார்ந்திருந்தாள்.

"ஹல்லோ! குட் மார்னிங்"... என்று கூறிக்கொண்டே கோகுல்நாதன் உள்ளே வந்தான். தேவமாதிற் கொப்பான எழிலுடன் சௌந்தர்ய தேவதையைப் போல் உட்கார்ந்திருக்கும் அமராபாயைப் பார்த்து தடைகட்டிய நாகம்போல் நின்றான். அமராபாய் கோகுல்நாதனைப் பார்த்த பிறகு தான் 'இன்று நாயிற்றுக் கிழமை யாதலால் காலையில் இவனுடைய முறை என்பது நினைவிற்கு வந்ததும் ஆநந்த அலை மோதியவளாய் சடக்கென்று எழுந்து நின்றாள்.

ஒருக்ஷண நேரம் இரு இதயங்களும் பெரும் புசற்காற்றில் அலை மோதித்தவித்து இருவிழிகளும் அப்புசலால் தத்தளிக்கும் மரக்கலம் போல் துடிதுடித்தன. தமது பரம ரகஸ்ய பாஷையால் என்னென்ன பேசிக் கொண்டனவோ ஆண்டவனுக்கே அர்ப்பணம். மவுனமும் பெருமூச்சும் போட்டன...அடுத்த நிமிடம் கோகுல்நாத் சற்று சமாளித்துக்கொண்டு..."ஓ...காதலனைச் சந்திக்கப்போகும் கண்கொள்ளாக் காக்ஷியா இது!...மெத்த சந்தோஷம். அசல் ரதிதேவியையே......

என்பதற்குள் அமராபாயின் கன்னங்கள் சிவந்து கண்கள் அவனையறியாமல் கலங்கி தாமரை இலையில் தளிர்க்கும் நீர்த்துளிகள்போல் கண்ணீர் நிரம்பி முத்துக்களைக் கக்கின. தான் அங்கு போவதற்குமுன் எப்படியாவது கோகுல்நாதனைப் பார்க்கவேண்டும் என்று துடிதுடித்த அவள், எதிரில் நேருக்கு நேராகப்

பார்க்கும்போது நிலைதடுமாறி வாயடைத்துப் பதுமைபோலானாள்.

கோகுல்நாதனும் தான் வந்த காரியத்தையே மறந்து விட்டான் என்றால் மிகையாகாது. சில விநாடிகளுக்குப் பிறகு... "அமராபாய்! கடவுள் உனக்கு சர்வமங்களத்தையும் கொடுத்து ரக்ஷிக்கட்டும். இதுதான் எனது இதயபூர்வமான ப்ரார்த்தனை. மலர்ந்த இதழ்போன்ற உன்முகமும் என்றும் மலர்ந்தே இருந்து மணத்தை அள்ளி வீச இறைவன் அருள்வாராக"......என்று கூறியபடியே ஒரு நீண்ட பெருமூச்சுடன் சடக்கென்று வெளியே போனான்.

அதே நிமிஷம் ஒரு நர்ஸ் வந்து "அம்மா! உங்களை யாரோ கூப்பிடுகிறார்கள், கார் வந்திருக்கிறது. எங்கேயோ போகவேண்டுமாமே, ப்ரயாண சித்தமாக வரும்படி பெரிய டாக்டர் சொன்னார்." என்று கூறியதைக் கேட்டதும் அலைமோதும் தத்தளிப்பிலிருக்கும் அமராபாயிக்கு ஒன்றுமே தோன்றாது அயோமயமான நிலைமை உண்டாகியது. பதில் ஏதும் சொல்லாமல் வந்தவளைப் போகும்படி அனுப்பி விட்டு உடம்பு துவண்டுபோய் அப்படியே ஒரு சோபாவில் சாய்ந்தாள்.

இதயத்தைப் பிறிக்கொண்டுவரும் அழுகையை அவளால்சமாளிக்கவே முடியாது போனதால் குளிக்கும் அறைக்குச் சென்று நன்றாக அழுது விட்டு முகத்தைக் கழுவுவதுபோல் அலம்பிக் கொண்டு வந்தாள். கோகுல்நாதன் இதுவரையில் தன்னை இம்மாதிரி பார்த்ததுமில்லை; பேசியதுமில்லை. இன்று எல்லாம் முற்றிலும் விநோதமாயிருப்பதால் அவளுடைய குழம்பித் துடிக்கும் மனத்தின் போராட்டம் பன்மடங்காகப் பெருகியது. அவனுடைய உள்ளத்தின் ப்ரதி பிம்பமும் ஒருவாறு தெரிந்ததில் ஒருபுறம் பேரானந்த உணர்ச்சியும் பொங்கியது.

இதற்குள் மறுபடியும் ஒரு ஆள் வந்துவிட்டதால் தன் பர்ஸை ஜாக்ரதையாக எடுத்துக்கொண்டு கிளம்பினாள், வீதியில் வெகு அழகானதும் கவர்ச்சி மிக்கதாயுமுள்ள காரில் நவநாகரிக சிகரத்தை எட்டிப்பிடித்த வீரன் வெகு ஒய்யாரமாக உட்கார்ந்திருந்தான். இவளைக் கண்டதும்..."ஹல்லோ...அமராபாய்! இப்படி ஏறுங்கள்!" என்று கூறியவாறு தான் உட்கார்ந்து ட்ரைவ் செய்யும் பக்கத்துக் கதவைத் திறந்து வழி காட்டினான்.

மவுனமே வடிவாய் அமராபாய் உள் பக்கம் கதவைத் திறந்து கொண்டு ஏறி உட்கார்ந்தாள். அங்கு கூட நின்ற ஆத்மநாதன் "பேஷ்! அப்படி சொல்லு...அமரா! நீ என்னமோ, பெரிய உத்யோகஸ்தன் பெண்ணைப் பிறந்து பி.ஏ. பாஸ் செய்து இருந்தும் தற்காலத்திய சில நாகரீகப் பேய்பிடித்த பெண்களைப் போல் உனக்கு நடக்கத் தெரியவில்லையே...வந்த உடனே 'ஹல்லோ' என்று கூவியவாறு ஓடிவந்துக் கை குலுக்கவேண்டும். முன்னாடி நீயாக முன் பக்கம் ஏறி உட்கார்ந்து அவரையும் கையைப் பிடித்து இழுத்து உட்காரச் செய்யவேண்டும். காரை நீயே ஓட்டத் தெரிந்து ஓட்டவேண்டும். இதெல்லாம் ஒன்றுமே நீ பழகவில்லையே!"......

என்று கூறி கட கடவென்று சிரித்துப் பின் "ஸார்! கோபித்துக் கொள்ளாதீர்கள். இவள் பி.ஏ. பாஸ் செய்த புத்திசாலியாயினும் தற்காலத்திய விபரீதநாகரீகத்தில் மூழ்கி தலைகால் தெரியாமல் தத்தாரியாய் திரியும் சில பெண்களைப் போன்ற கேவல குணம் இவள் குடும்பத்தில் யாருக்குமே கிடையாது. அடக்க

ஒடுக்கத்துடன் கர்நாடகமாகத் தான் இருப்பார்கள் "... என்று பெருமை யாகப் பேசுவதைக் கேட்டு வந்த நாகரீகப் பழம் சிரித்துக்கொண்டே "அப்படித் தான் ஸார் இருக்கணும் அதுதான் எனக்குப் பிடிக்கும்...... குட்மார்னிங்......வருகிறேன்." என்று கூறியவாறு காரை கிர் ரென்று ஓட்டினன். பேரிரைச்ச லுடன் கார் பறந்தது.

காருக்குள்ளிருக்கும் அமராபா யின் மனே வேகத்தை......வேத னையை...பதறலைச் சொல்லிமுடி யாது. கடிதத்தை முதலிலேயே கொடுத்துவிடலாமா...என்றுபர்ஸை திறக்கிருள். அடுத்த விநாடியே கை கள் நடுங்குகின்றன. அவளையறியா மல் ஏதோ கலக்கம், திடுக்குதிடுக் கென்று மன அதிர்ச்சி, கூறத்திற மற்ற பயம் ஆகிய எல்லாம் நன்ருக முற்றுகையிட்டு வதைப்பதால் உடனே மூடுகிருள். அடுத்தக்ஷணமே 'அமராபாய்! உனக்குக்கடவுள் சர்வ மங்களமும் கொடுத்து ரக்ஷிக்கட்டும். இதுதான் என் இதய பூர்வமான ப்ரார்த்தனை. மலர்ந்த இதழ்போன்ற உனது முகமும் அகமும் என்றும் மலர்ந்தே இருந்து மனத்தை அள்ளி வீச இறைவன் அருள்வாராக" என்று சற்று முன்புதான் கோகுல் நாதன் கூறிய யாழிசைக்கும் நாதம் போன்ற இனிய வார்த்தைகள் கணீர் கணீர் என்று காதில் ஒலித்து அவளை ஒரு குலுக்கு குலுக்கிய வேகத்தில் காரோடு அப்படியே பறப்பதுபோன்று ஒரு உணர்ச்சி தோன்றி வதைத்தது.

## 35

சாதாரண விஷயம் என்ருலே ஊர் ஜனங்களின் வாய்க்கும் வம்புக் கும் பெரும் விருந்தாக அமையும். அதோடு மகத்தான விஷயமும் வியப் பும் கலந்த சம்பவம் கிடைத்துவிட் டால் கேட்கவேண்டுமா? மாட்டுக் காரப் பையன் சொல்லிய விஷயம் காற்றுபோல் க்ராமம் பூராவும் ஒரே நொடிப் பொழுதில் பரவி மிகுந்த பரபரப்பைக் கொடுத்தது. ஸாமி நாதனிடம் உபசாரம் விசாரிக்கப் போவதுபோல் ஒவ்வொருவராக வந்து வீட்டிற்குள் கும்பல் சேர்ந்தது அவனை திக்கு முக்காடச் செய்து விட்டது.

பக்கத்து வீட்டு பாட்டியம்மாள் சம்பிரதாயத்தைச் சிறிதும் கைவிடா மல் செய்யும் கடமைக்காரியாகை யால் பெரிதாகப் பிலாக்கணம் பாடி அழத்துடங்கிவிட்டாள். அதற்குள் அனேகர் அந்தப் பாழுங் கிணற் றுக்கு ஓடினர்கள். சிலர் பயந்து கொண்டு சற்று தூரத்திலேயே நின் ருர்கள்.

அருகில் சென்றவர்கள் எல்லாம் மூக்கைப் பிடித்துக்கொண்டு "ஐய் யய்யோ! பிணநாத்தம் சகிக்கமுடிய வில்லையே!" என்று குடலைக் குமட் டிக்கொண்டு வெளியில் வந்தார்கள். சாமிநாதன் நிலைமை விவரிக்க முடி யாத சங்கடமாகிவிட்டது. ஊரிலிருப் பவர்கள்சும்மாவிடுகிருர்களா! "என் டாப்பா! எல்லாம்தான் ஆகிவிட் டதே! சகலமும் வெட்ட வெளியாகி விட்ட பிறகு இன்னும் என்ன தாம தம் வாடாப்பா! கிணற்றருகில் போய் பார்க்கலாம்" என்று தொணப்ப ஆரம்பித்தார்கள்.

தான் இத்தகைய எதிர்பாராத சங்கடங்களில் மாட்டிக்கொண் டுள்ள ஜோடே ரத்தினப்ரபாவுக்குத் தெரியாதிருந்தால் போதும் என்று எண்ணுகிருனேயன்றி ஆபத்து தலைக்குமேல் வந்துவிட்டதே என் பதை மறந்தான். உடனே ஓட்ட மாக ஓடி ட்ரைவரிடம் சென்று "ட்ரைவர்! என் உறவினர் ஒருவ ருக்கு உடம்பு மிகவும் ஆபத்தான

நிலைமையிலிருக்கிறது. அதனால் நான் இன்று இருந்துதான் பார்த்துக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. சொந்தக்காரராகையால் பேசாமல் போய்விடுவது சரியல்ல. அம்மாளிடம் நான் நாளை வருவதாகத் தெரிவி. காரைக் கொண்டுபோய் விடு." என்றான்.

ட்ரைவர் :—சரி! அப்படியானால் நாளை தினம் காலையில் காரைக் கொண்டு வரட்டுமா?...

சாமி :—வேண்டாம்! வேண்டாம்! காரே வேண்டாம்! இங்கு இது எப்போது போகுமோ! யார் கண்டது? நாளைக்கூட இழுத்துக் கொண்டு கிடந்தால் என்ன செய்வது? ஆகையால் இங்குள்ள நிலைமையை அனுசரித்து நான் வருகிறேன். அம்மாவிடம் சொல்லு— என்று கூறி காரை அனுப்பிய பிறகுதான் அவனுக்கு உயிர் வந்தது.

அதன் பிறகு எல்லோருமாகக் கிணத்தருகில் ஓடினார்கள். அக்கிணறு ஊருக்கு வெளியே வெறும் பாழுங்கிணறாக இருப்பதாலும் அவ்விடத்தில் மனித சஞ்சாரமே கிடையாதாகையாலும் அங்கு துணிந்து மனிதர்கள் போவதில்லை. அதோடு அக்கிணத்தில் பேய் பிசாசு வாசம் செய்வதாக ஒரு பயங்கர வதந்தி எப்போதுமே உலாவுவதால் அக்கிணறு ஒருவராலும் கவனிக்கப்படாமலேயே இருந்தது.

சற்று தைரியமிருப்பவர்கள் மட்டும் எட்டிப் பார்த்து குடல் குமட்டலுடன் வெளியே வந்தார்கள். ஸாமிநாதன் முகத்தில் ஈயாடவில்லை. ஏதேதோ கவலை, திகில் எல்லாம் ஒன்று கூடி வதைக்கின்றன. இரவு காலத்தின் கொடிய அந்தகாரம் சூழ்ந்துவிட்டதால் எல்லோரும் நழுவிவிட்டார்கள். அதிகாரிகள் வராமல் யார் என்னசெய்யமுடியும்?

சாமிநாதனும் வீட்டிற்கு வந்தான். அவன் மனது உத்திரவு சீட்டின்றி பல மைல்கள் தூரம் உலாவத் தொடங்கியது. தான்தான் குற்றவாளி என்று தன்னைப் பிடித்துக் கொள்வார்களோ? உன்னுடைய அஜாக்ரதையினால் தான், உன்னுடைய ஆதரவின்மையினால்தான் இந்த கொலை ஏற்பட்டது என்று உலகம் தூற்றுமோ?... கண்ட கசடனையும் நம்பி கணவன் என்று கூறி ஒரு உத்தமியின் கற்புக்குப் பங்கத்தைக் கண்மூடித்தனமாக வெறியினால் உண்டாக்கிவிட்டு என் சீலத்தையும் கெடுத்துக்கொள்ளச் சென்றேனே! அந்த பாதகத்தினால் தன் கொலைபாதகமும்கூடச் சார்ந்துவிட்டதா!

நான் நிராதரவாய் அன்னியனிடம்... அதிலும் கொலை பாதகனிடம் துணிந்து விட்டுச் சென்றதனலன்றோ அவள், நிர்க்கதியையும் நிராதரவையும் எண்ணி, மனம் உடைந்து 'ப்ராணனை விடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை' என்று தீர்மானித்து இம்மாதிரிச் செய்தாளோ!...இந்த பாதகத்தை நான் இனி எத்தனை ஜென்மம் எடுத்தால் தான் தீர்ப்பேன்? என்று நினைக்க நினைக்க அவன் துக்கமும் கலக்கமும் கட்டுமீறிவிட்டன.

இரவு ஏற ஏற அவனுடைய பயங்கரமும் பீதியும் பன்மடங்காக அதிகரித்து மூளையைக் கலக்கிவிடும் போலாகிவிட்டன. அப்படியே வெகு நேரம் தவித்தவாறு சற்று கண்ணயர்ந்தான். அவனுடைய தாயார் காளி ரூபத்தில் தோன்றி "அட பாவி! உன்னை நம்பி நான் என் ரத்தினத்தை விட்டுவிட்டுச் சென்றதற்கு இதுதானடா பலன்! நீயே காப்பாற்றி ஆதரிக்க வேண்டிய கையால் கொலைசெய்துவிட்டா

யேடா!...ஸ்த்ரீஹத்தி உன்னை சும்மா விடுமா! பெண்பாவம், பெண் தோஷம் என்பதைக்கூட மறந்து பரிசுத்தவதியைப் பாழாக்கி விட்டாயே...நல்ல சிறந்த ரத்தினத்தை உனக்கு மனைவியாக நான் தேடி வைத்திருக்கையில் அவளையும் உதறித் தள்ளிவிட்டு, உன் தகப்பனரே அவள் வயிற்றில் வந்து பிறந்திருக்கையில் அதையும் லக்ஷியம் செய்யாமல் பித்ருத்ரோஹியைப்போல் பால்மணம் மாருத பாலகனையும் விலக்கிய நீ ஜாதிச்சண்டாளனை விடக் கேவலமான கர்ம சண்டாளனுகியதோடு நிற்காமல் பரஸ்த்ரீ கமனத்திற்குமா துணிந்துவிட்டாய்?

பாதகா! உன் த்ரோகம், உன் வஞ்சனை...உன் கடின சித்தத்தின் கோரத்தாண்டவம் இவைகளை நீ உலகத்திற்கு வேண்டுமானுல் மறைத்துவிட்டதாக எண்ணிவிடலாம். என்னிடம் உன்னுல்மறைக்க முடியாது...நான் சர்வத்தையும் இமை இசைக்காமல் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இதன் பலனை நீ அனுபவிக்காது போக மாட்டாய்...அதோ பார்...எரிகிற ஜ்வாலாக்னி! அதன் சமீபத்தில் தேவரூபமாக உன் அகிலா நிற்கிருள் பாரு...அந்த அக்னி அவளை எரித்ததா!...அவளே அக்கினிப்பிழம்பாயிற்றே! அக்கினியருகிலும் அவளுடைய சோபைமிக்க முகம் மலர்ந்த இதழ்போல் ப்ரகாசிப்பதையும் அவளது பரிசுத்தமும் தெய்வீகத்யாகமும் அவள் முகத்தில் ப்ரகாசிப்பதையும் நன்ருகப்பாரடா! மடையா.. கண்ணைத்திறந்து பாரு. நெருப்பை ஈ மொய்த்ததென்று இனி வாய் கூசாது சொல்லாதே.

உலகத்தோடு ஒத்துவாழ் என்கிற வாக்யத்தை மறந்து, நீ நடத்திய காலக்கொடுமையை மறந்து நீயே இப்போது உன் வேஷத்தை மாற்றிக்கொண்டு பரஸ்த்ரீகமனமாகிய காளகோடி விஷத்தை அமிருதமென்று எண்ணிப் புகுந்துள்ள த்ரோகம் உன்னை விடுமா!

பொழுதுபோக்கிற்காகவும், உலகத்திற்கு உதவியாகவும் நல்ல எண்ணத்துடன் ஒரு காரியத்தைச் செய்த உன் மனைவியையும் தங்கையையும் நீ செய்த வஞ்சனையின் பலனை உன் கண்ணையே அவித்துவிட என்னுல் முடியாதென்று நினைத்துவிட்டாயா! நான் நினைத்தால் ஒரு நொடியில் சாபமிட்டு உன்னை வதை செய்துவிடுவேன்... ஆனுல் நீ செய்த சதிக்கு நீ வருந்தி புத்தி திருந்தி உலகத்திற்கு நல்ல படிப்பினையைப் போதிக்கவேண்டியே உன்னை வைத்திருக்கிறேன். சண்டாளா! இனி நீ செய்துள்ள அக்ரமத்திற்கு ஆயிரம் காலம் தவம் செய்தாலும் தீருமா...உன்னைப் பெற்ற வயிறு பதறுகிறது...உன் கையால் செய்யும் திவசத்தையும் இனி ஏற்றுக்கொள்ளமாட்டேன். நீ சண்டாளன்...,நீசன்...அயோக்யன்"...என்று பெரிதாக கர்ஜனை செய்வதுபோன்று சொப்பனங் கண்டு அலறியடித்து எழுந்தான்.

காளிகாதேவியைப்போல் சகல அம்சத்திலும் தன் தாய் தோன்றி சொல்லிய வார்த்தைகள் அவன் நெஞ்சில் ஈட்டியால் குத்தியது போலும் நன்ருக காய்ச்சியவேலைப் பாய்ச்சுவதுபோலும் ஆழமாகப் பொத்தி அவன் மூளையைச் சிதறவடித்தன. எழுந்து உட்கார்ந்தான். எங்கும் இருள் சூழ்ந்திருந்ததால் இன்னும் பொழுது விடியவில்லை என்பதை அறிந்தான். "ஐயோ! இதென்ன பயங்கரக் கனவு?... இது வெறும் கனவாகவே போய் விடுமா...அன்றி...என்று நினைக்



கும்போது அந்த பயங்கரமான காளியின் உருவம் மீண்டும் கண் முன்பு தோன்றி ஒரு கலக்கு கலக்கி அவன் தேகம் முற்றும் வெயர்வை வெள்ளத்தில் மிதந்து நடுங்கியது.

## 36

"பொழுது விடிந்தால் என்ன ஆபத்து விளையுமோ! அகிலாவின் பிணத்தின் கோராமையைக் கண்டு உலகம் எப்படித் தூற்றுமோ, அதிகாரிகள் இக் கொலைக்கு நீதான் காரணம் என்று எங்கே பிடித்து விலங்கிட்டுவிடுவார்களோ! இந்த பயங்கரங்களும் வெட்கக்கேடும் ரத்தினப்ரபாவுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பாள். என் பண்டிதத் தனத்தை வெறுத்து காறித் துப்புவாளே ... என்ன செய்வேன்... ஒரு கால் ஸரஸாவுக்குத்தானுகட்டும், என் இந்த அவலமானதும் வெறுக்கக்கூடியதுமான விஷயம் தெரிந்தால் என்னிடம் என்ன மதிப்பிருக்கும்? என்னைப்பற்றி என்ன நினைப்பாள். என் பிழைப்பு திடீரென்று சொர்க்கப் பாதையில் காலை வைத்ததாக எண்ணிய மறு நிமிஷமே நரகப் பாதைக்கு உருட்டியடித்துக் கொண்டு வந்துவிட்டதே! போதாத காலம் என்பது இதுதானே! ஏன்? நாம் இந்த விபத்துக்களுக்கெல்லாம்

அகப்படாமல் எங்காவது ஓடிவிட்டால் என்ன?... அப்படிச் செய்தால் சந்தேகம் இன்னும் அதிகமாகி போலீஸாரும் என்னைத் தேடவாரம்பித்துவிடமாட்டார்களா! இந்த தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது?'' என்கிற பெருந்திதிலும் குழப்பமும் அடைந்து தம்பித்துவிட்டான்.

ஊர் ஜனங்களெல்லாம் இவனைப் பாத்துக் கருவுவதுபோலும் இந்த ஆசாமியைவிடவேகூடாது இவனை முதலில் பிடித்துச் சரியானபடி தண்டிக்கவேண்டும் என்று கூறிக் குசுமசவென்று பேசுவதுபோலும் ஒரு உணர்ச்சி உண்டாகிவிட்டதால் தனக்குத்தானே குற்றவாளி, குற்றவாளி... என்ற எண்ணம் உறுதியாகத் தோன்றி வதைத்தது. அந்த பயங்கரமே அவனைச் சக்கைச் சாறுகப் பிழியவாரம்பித்தது.

பொழுது விடியப்போகிறதா என்று ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். பாழுங் கிணத்தருகில் அசாத்யக்கூட்டம். போலீஸாரும் ஊர் க்ராமாதிகாரிகளுந் நிரம்பிவிட்டார்கள். சாமிநாதனின் தோற்றம் அம்மன்கோயிலுக்கு பலியிடக் கொண்டுவரப்பட்ட ஆட்டுக்கடா போல் தோன்றியது. மனிதன் ப்ரேதம்போல் காணப்பட்டான்.

முதலில் அதிகாரிகள் இரண்டு ஹரிஜன ஆட்களைவிட்டு கிணற்றில் இறங்கி கொம்பினுல் கிளறிப் பார்க்கச்செய்தார்கள். மிகவும் கனமாய் தென்பட்டது. நன்ருகப் பார்த்தபோது ப்ரம்மாண்டமான எருது தாறுமாருக விழுந்துஇறந்து அழுகிக்கொண்டு வருவதால் நாற்றம் சகிக்கமுடியாது இருப்பதாகத் தெரிந்த ஜனங்கள் அப்படியே ஏமாந்து நின்ருர்கள்.

இவ்வூரில் யார் வீட்டிலும் எருது மாடு காணுமலில்லை. அதனுல் அது வெளியிலிருந்து இடம் தடுமாறி வந்து புதர் நிறைந்துள்ள கிணற்றில் தவறி விழுந்திருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் பிறகுதான் ஸாமிநாதனுக்கு ஒரு சிறிது உயிர் வந்தது. எனினும் ''காணுதுபோயிருக்கும் அகிலாவைப் பற்றி என்னவிதமாயறிவது? எங்கு கண்காணுத இடத்திற்குப் போய் தற்கொலை புரிந்துகொண்டிருப்பாளோ! அவளைப்பற்றி ஒன்றுமே கவனிக்காமல் நான் இனியும் என் போக்காகப் போனல் அது தர்மமா! உலகத்தார் சும்மா இருப்பார்களா! பெரிய விபத்து வரப்போகிறதென்கிறபயங்கரத்திலிருந்து தப்பித்தோம் இனிமேல் என்ன செய்வது?'' என்கிற குழப்பம் உண்டாகியது.

அகிலாவின் பேச்சை எடுத்துக் கொண்டு வந்து ஊர்ஜனங்கள் சாமிநாதனை முற்றுகையிட்டு இஷ்டம் போல் பேச வாரம்பித்ததைக் கண்டதும் சாமிநாதனுக்கு சற்று எரிச்சல் வந்தது. எப்படியாவது இந்த இடத்தைவிட்டுப் போய்விட்டால் போதும்போல் தோன்றியதால் ஒருவருக்கும் பதில் சொல்லவே பிடிக்காது கோபம் கோபமாக வந்து எல்லோர்மீதும் சீறிவிழுந்து சிள்ளென்று முறைத்தான். ''என்குடும்ப விஷயத்தை நீங்கள் கேட்கவேண்டிய அவச்யமில்லை. என்பாடு, என் தங்கை பாடு. இந்த விஷயத்தில் தலைபிட்டால் விபரீதமாகிவிடும்.'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு வீட்டில் வந்து கதவைப் போட்டுக் கொண்டு 'சாமான்களை ஒழித்துக் கொண்டு இரவோடிரவாக இந்த ஊரைவிட்டுப் போய்விடவேண்டும்' என்கிற திடசங்கல்பத்துடன் உள்ளுக்குள் புகுந்துகொண்டு சாமான்களைக் கட்டவாரம்பித்தான்.

ஊர் ஜனங்கள் "அந்த கிணற்றில் அகிலாவின் பிணம் அகப்பட்டிருக்கக் கூடாதா! அந்த அல்பனை ஒரு ஆட்டம் ஆட்டியிருக்கலாமே?'' என்று விசனித்தார்கள். மறுநாள் காலை சாமிநாதன் வீடு திறந்துகிடப்பதோடு வீடு முற்றிலும் காலியாகக் கிடப்பதைக் கண்டு ஊர் ஜனங்களே வியந்தார்கள். எங்கு இரவோடிரவாகப் போயிருப்பான்? இதென்ன ஆச்சரியமாயிருக்கிறதே!'' என்று வீடு பூரா போய்ப் பார்த்தார்கள். துடைப்பக்குச்சிகூட இல்லாமல் அத்தனை சுத்தமாக ஒழித்து எப்படி ஒரு மனிதன் கொண்டுபோயிருக்க முடியும்?'' என்று ப்ரமித்தார்கள்.

ஊரிலிருந்த வண்டியோ, ஆட்களோ ஒன்றும் போகவில்லை. மாயமாகவே தோன்றியது. "அகிலாவின் எப்படித்தான் மறைந்திருப்பாள். நல்ல விவேகியாயிருந்த பெண் கெட்டுப்போயிருக்க முடியுமா!'' என்றும் அவர்களே பேசிக்கொண்டார்கள். உலகம் பலவிதம். அதற்கு வரம்பு வைத்துப் பேசுவதற்கு யாராலாவது முடியுமா? இது தான் உலக நியதி என்பது...

## 37

ரத்தினப்ரபாவுக்குப் பாடம் சொல்லும் நேரம் வந்தது. வழக்கம் போல் சாமிநாதன் வந்தமர்ந்தான். அவனைப்பற்றி அவள் என்ன நினைத்திருக்கிறளோ! என்று உள்ளுக்குள் அவனையறியாது ஒருவித கலவரம் பாதித்ததால் முகத்தில் அசடு வழிந்தது.

ரத்ன ப்ரபா மிக்க மரியாதையுடன் "யாருக்கோ தேக அசுகம் என்றீர்களாமே...எப்படியிருக்கிறது?'' என்று கேட்டாள். சற்றும் யோசிக்காமல் சாமிநாதன் "உடம்பு தேவலை. 'இனி உயிருக்குப் பயமில்லை.' என்று டாக்டர்கள் சொல்லியதால் நான் வந்துவிட்டேன்'' என்றான்.

வழக்கம்போல் ரத்தினப்ரபா பாடம் சொல்லிக்கொள்ள உட்காராமல் நிற்பதைக் கண்டு சாமிநாதனின் மனம் துணுக்குற்றது. அவள் சற்று கம்பீரமான தொனியில்... "குருநாதா! என்னை க்ஷமிக்க வேண்டும். எந்த வித்தையையும் போதிக்கக்கூடிய ஆசான் சுத்த சுடர் ஜோதியாய்... த்யாகாக்கினிப் பிழம்பாய் இருந்து சிஷ்யவர்க்கத்தின் மாசுகளை உள்ளும் புறமும் போக்கித் தூய்மையாக்கும் சக்தியுடன் ப்ராசிக்க வேண்டுமென்பது முன்னோர்களின் வேதவாக்கு. சாஸ்திரமும் சம்பிரதாயமும்கூட அப்படியே என்பதை மகா பண்டிதராகிய தங்களுக்கு நான் எடுத்துக்கூற வேண்டியதில்லை.

ப்ரகாசத்திற்காகவும் வழிகாட்டுவதற்காகவும் ஏற்றியுள்ள மங்கள தீபம் வீட்டையோ, மனிதனையோ கொளுத்துவதற்கு உபயோகமாகுமானல் அதை ஜோதி தெய்வமென்று எவ்வாறு வணங்கமுடியும்? "அத்தகைய அசுசி மனிதனை ஆசான் என்று நம்பி, குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொள்ள வேண்டாம். இன்றோடு உனது வேஷக்கார ஆசானுக்கு குருதக்ஷிணையைக் கொடுத்து அனுப்பிவிடு'' என்று எனது தேவியின் கட்டளை. ஆகையால் குருதக்ஷிணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்'' என்று கண்டிப்பான தொனியில் சற்று அலக்ஷியமாகவே கூறினள்.

சாமிநாதனுக்கு வாயே அடைத்து மூச்சு நின்றதுபோலாகி உலகம் தலைகீழாய் புரண்டுவிட்டதோ! என்றும் தோன்றியதால் மளமளவென்று கண்ணீர் வந்தது.

அதைக்கண்டு அலக்ஷியமாகச்

சிரித்தபடியே ரத்தினப்ரபா, "உம். கண்ணீர் விட்டு மாயாஜாலம் செய்யும் ஜாலவித்தையைக் கற்றவர்கள் பெண்கள் என்கிற பழிச் சொல்லை யாரோ கட்டிவிட்டார்கள். இப்போது அந்த சொல்லின் தாக்குதலுக்கு இருபாலாருந்தான் உரியவர்கள் என்று' நிதர்சனமாகிறது. குருநாதா! பசுத்தோலைப் போர்த்துக்கொண்டு புலி வந்தால் மனிதன் வேண்டுமானால் மிரண்டு ஏமாறலாம். புலியைக் கண்டு புலியே எங்காவது ஏமாறுமா! ஒருபோதும் ஏமாறாது. இனி தங்கள் வஞ்சனைக்கும் பொய் பித்தலாட்டத்திற்கும் இங்கு இடமில்லை. தயவுசெய்து எனது குருதக்ஷிணையைப் பெற்றுக் கொண்டு என்னை மன்னித்தருள வேண்டும்" என்று கூறிவிட்டு சடக்கென்று உள்ளே போனாள்.

அடுத்த வினாடியே எலும்பும் கூடுமான ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டு ஒய்யாரமாய் ரத்தினப்ரபாவும், பின்னாலேயே இன்னொரு எலும்புக்கூடான நடைப்பிணம் போன்ற ஒரு பெண்மணியும் வர ரத்தினப்ரபா குழந்தையையும் அந்த மங்கையையும் அவன் காலடியில் கிடத்திவிட்டு தன் தாதி தாம்பூலத் தட்டை நீட்ட அதையும் வாங்கி சாமிநாதன் காலடியில் வைத்து விட்டு, 'குருநாதா! இதுதான் என் குருதக்ஷிணை. இப்போது ஆசானுக்குள்ள யோக்யதை தங்களிடம் இல்லை என்கிற வேதவாக்கு... எனது தேவியின் வீரவாக்கு... சரியான உண்மைதான் என்பது உறுதியாயிற்று!" என்றாள்.

ஏற்கனவே நிலை தடுமாறித் தத்தளிக்கும் சாமிநாதனின் முன்பு கேவலமான நிலைமையில் உருமாறிப் போய் கந்தல் உடையும் புழுதி மேனியும் எண்ணெய்கண்டு யுகம் ஆனதுபோன்ற தலையுமாக நிற்கும் ஸரஸாவையும், ப்ராணன் இருக்கிறதா இல்லையா! என்று சந்தேகிக்கும்படியான நிலைமையில் உள்ள குழந்தையையும் பார்த்ததும் எரிமலையே தன் தலைமீது புரண்டுவிட்டதுபோன்ற அதிர்ச்சி உண்டாகியது.

"இவளா ஸரஸா!... ஸ ர ஸ ா இங்கு எப்படி வந்தாள்? இதென்ன வேடிக்கை! இதென்ன மாயமான காக்ஷி!"... என்று குழம்பித் தவித்தவாறு குழந்தையையும் அவளையும் மாறி மாறிப் பார்க்கிறான். ரத்தினாவையும் பார்க்கிறான். அத்தனை கேவலமான நிலைமையிலும் வேத்துமுகமறியாத அக் குழந்தை அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே "பாப்பாப்பா... தாத் தாத்தா... என்று மழலைச்சொல்லை மலர்போல் உதிர்த்து அவன் முகத்தைத்தாவிப்பிடித்து வருடியது.

அவனையறியாமலேயே அவன் தேகம் சிலிர்த்து படபடத்து நடுங்கும் அதிர்ச்சி வெளியில்கூடத் தெரிந்தது. இந்த காட்சியைக் கண்ட ரத்னப்ரபா... ஒரு கலகலப்பான சிரிப்பை சிரித்துவிட்டு "உம்... பகவான் உமக்கு இத்தகைய நிகரற்ற செல்வத்தைக் கொடுத்தும் நீர் நித்ய தரித்திரனாய்... கண்ணிருந்தும் கபோதியைப்போல் காலத்தைக் கடத்தும்படியாக உமது பாண்டித்யம் உமக்கு போதித்ததை எண்ணி நான் பரிதாபப்படுகிறேன்.

நெஞ்சும் வாயும் துணிந்து மனைவிக்குப் பயித்தியம் என்று கூறினீரே! இப்போது யார் பயித்தியம்? யார் பொய்யன்... என்பது தெரிய வருகிறதா! தர்ம சாஸ்திரத்தைப் படித்த நீரே கட்டிய மனைவியையும் பெத்த பிள்ளையையும் இத்தகைய த்ரோகம் செய்தால் உம்மிடம் சிஷ்யத்வம் கொண்டாடுகிறவர்களுக்

கும் அதே உபதேசந்தானே செய்வீர்கள்... இந்த எலும்புக்கூடு ஆத்மாக்களைப் பார்த்தபிறகு கூட மனது இரங்கவில்லையா! பட்டை தீர்த்த வைரம் போன்ற ப்ரகாசத்துடன் மனைவியிருக்கையில் அதைக் குப்பையில் போட்டுவிட்டு இமிடேஷன் வைரத்தை நாடிவருவதுபோல் வந்துள்ள உமது வஞ்சகம் எனக்கா தெரியாது? குருநாதா! நான் தாசி குலத்தில் பிறந்தவள்தான்...எனினும் நீர் நினைத்துள்ளபடி கிடைத்துவிடும் என்று நினைக்கவேண்டாம். என்கால் செருப்புகூட உமதுமோக வலைக்கண்களில் அகப்படாது என்பதை நினைவு வைத்துக்கொள்ளும்.

சிஷ்யர்களின் அஞ்ஞான இருளைப்போக்கி ஞான விளக்கை ஏற்றும் குருவே ஞான சூனியராய்... அல்ப மதியுடையராய் இருக்கையில் அந்த குருவினால் என்ன உபயோகம்?... குருநாதா!... இதோ இக் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டு தமது இஷ்டமான இடத்தில் வாஸம் செய்யலாம்"... என்று படபடத்துக்கூறி வீர ரமணியைப் போல் நின்றாள்.

கொலை செய்தவன் முகத்தில்கூட சற்று தெம்பும் தெளிவும் இருக்கும். சாமிநாதன் முகத்தில் இதுகூட இல்லாது வெறும் ப்ரேதக் களைதான் தாண்டவமாடியது. தான் எத்தகைய மகத்தான பாதகத்தைச் செய்துவிட்டோம்... என்கிற நினைப்பு இந்த நிமிஷந்தான் அவன் அடி இதயத்தில் இலேசாகப் படரத் தொடங்கியது.

"மனைவி மக்களைக் கைவிட்டவனுக்கு சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறது?"... என்று ஒரு வெடிகுண்டை வீசி எறிவதுபோல் ரத்தினப்ரபா திடீரென்று, குருசிஷ்யனைக் கேட்பதுபோல் கேட்டாள்.

சாமிநாதன் சற்று தியங்கினான். "உம்...பதில் சொல்லும்" என்று நிர்த்தாக்ஷிண்யமாய் ரத்தினப்ரபா கேட்டாள்...ஸாமிநாதன் அசடு வழிய..."பதிதன் என்று கூறப்பட்டிருக்கிறது" என்றான். ரத்தினப்ரபா பெரிதாக சிரித்துக்கொண்டே "ஸ்வாமீ! ஒரு மனிதன் தனது தாய்மையின் ப்ரகாசத்தினால் புனிதன் என்று உலகம் போற்றும்படி பெயரெடுப்பது மிக்க கஷ்டம். பதிதன் என்று பெயரெடுப்பதில் சிறிதாகிலும் கஷ்டம் இருக்கிறதா பாரும். பதிதன்மட்டுமல்ல... இந்த ஜீவன்களும் இப்பவோ! பின்னையோ! என்று உயிரைவிடத் தயாராயிருக்கிறார்கள். அவ்வாறு விட்டு விட்டால் கொலைப்பாதகம்கூட உம்மையே வந்து சாரும் என்பதை மறந்தீரா?... ஏதோ போனதுபோகட்டும். நான் சில தினங்களாவது தங்களை குருவாக எண்ணி ஆச்ரயித்த தோஷத்திற்காக உம்முடைய கபட வேஷத்தையறிந்தும் மன்னித்து பரிசுகள் வழங்கி சமாதானமாகவும் மரியாதையாகவும் வெளியேயனுப்புகிறேன்...'இனி இந்த ஆத்மாக்களை அனாதரவாகத் தெருவில் விடுவதில்லை எனது கடமையை எண்ணிக் காப்பாற்றுகிறேன்.' என்று என் குல தெய்வமாகிய அம்பாளின் மீது ஆணையிட்டு ப்ரதிக்ஞை செய்யும். அந்த ஒரு காரியம் உமது மலை போன்ற பாதகத்தை ஒரு சிறிதாவது குறைத்து ரக்ஷிக்கும்...ப்ரமாணம் செய்யும். உம்... இனி விழிப்பதில் பயனில்லை. ஏற்கெனவே காணாதுபோய்விட்ட உமது தங்கையின் கதி எப்படியோ! அந்த ரகஸியமும் நானறியாததல்ல" என்று கடுமையான பார்வையுடன் கூறினாள்.

பார்த்தான் சாமிநாதன்... தனது மானம் ஆகாசத்தில் பறந்துபோய்



விட்டதைஉணர்ந்ததோடு "உனக்கு தற்சமயம் குருவாயிருந்து உன் இருளையும் மடமையையும் போக்கிக் காத்த மாபெரும் ரக்ஷகி அவள்தான். அவள்மீது நீ கொண்டுள்ள விபரீத எண்ணம் உன்னையும் உன் குடும்பத்தையும் எரித்து ஹதாஹதம் செய்துவிடும். அந்த கொடிய தீ போன்ற எண்ணத்தை உடனே மறந்து அவளிடமே மன்னிப்பு பெற்றுக்கொள்ளு. ஏன் இன்னமும் தயங்குகிறாய்?" என்று அவ்வறையில் மாட்டியுள்ள கடவுள்களின் படங்கள் முற்றும் அவனுக்கு எடுத்துக் கூறி கண்களில் தீப்பொறிகள் பறக்கப் பார்ப்பதுபோல் ஒரு

பயங்கரமான உருவெளித்தோற்றமும் உண்மையில் நடுக்கலும் தோன்றி க்ஷண நேரத்தில் அவனை நிலை தடுமாறச்செய்துவிட்டன.

அதே ஆவேசத்துடன் சடக்கென்று எழுந்து ரத்தினப்ரபாவின் முன் நெடுஞ்சாங்கடையாக விழுந்து வணங்கி "தாயே! உபதேசம் பெறுவதற்கும் பகவானைத் தொழுவதற்கும் எத்தகைய ஜாதி வேற்றுமையோ, மத வேற்றுமையோ, ஆண் பெண் என்கிற வித்யாசமோ எதுவுமில்லை என்பது தாங்களறிந்ததே. அத்தகைய தங்களை நான் சிஷ்யையாயடையாமல் குருவாகவே மனப்பூர்வமான ப்ரீதியுடன் எண்ணி ஏற்று வந்தனமளிக்கிறேன். நான் எத்தகைய பெரும் பாதகம் செய்துவிட்டேன் என்பதையும், செய்யவிருந்தேன் என்பதையும் எடுத்துக்காட்டி, தக்க சமயத்தில் என்னைக் கண் தெரியச்செய்து காப்பாற்றிய தங்களுக்கு ஆயிரங்கோடி வந்தனங்கள். நான் படித்தும் முட்டாள்! உயர்குலத்தில் பிறந்தும் சண்டாளன். ஆறறிவுபடைத்த மானிட ஜென்மம் படைத்தும் கேவலம் மிருகத்திலும் கொடிய மிருகம். உயர்ந்த ஆண்பிறவியாகப்பிறந்தும் பேடியிலும் பேடி...தாயே! தங்களை நான் வாயினாலும் சொல்லக்கூடாத வகையில்....ஐயோ!... பெண்டாள நினைத்தது உண்மை...உண்மை... ஆனால் தாங்கள் என்னறியாமையைப் போக்கி, ஞானக்கண்ணைத் திறந்துவைத்த இன்னிமிடம்முதல் தங்களை நான் தெய்வமாயும்... என்னைப் பெற்ற தாயாயும்...குருவாயும் சத்யமாய் நினைக்கிறேன். உங்கள் குலதெய்வத்தின்மீது ஆணையாய்த் தங்களை நான் பரிசுத்த இதயத்துடன் சரணகதியடைகிறேன். தாயே! தன் மனைவியால் காளிதாஸன் உயர்பதவியை அடைந்தது போல் தங்களால் நான் என்றும் அழியாத உயர்பதவியைப் பெற்றுவிட்டேன். இனி நான் பழய கசடனல்ல. புதிய ஜென்மம் எடுத்த தூய ஆத்மாவாக ஆய்விட்டேன். தங்களுக்கு நான் நினைத்த த்ரோகத்திற்குத் தங்கள் காலில் விழுந்து மன்னிப்பு கோருவதைத் தவிர வேறு வழியில்லை. என்னை மன்னித்து என் குற்றங்களை மறந்து என்றென்றும் எனக்கு முன்போலவே பாடங் கற்பிக்கும் பாக்யத்தைக் கொடுக்க வேண்டும். இனி ஒரு அணுவளவு கூட என்மீது சந்தேகம் வேண்டாம். இந்த வெட்கக்கேடு இதோடு இந்த இடத்தோடு மறைந்து என்னையும் ஒரு மனிதனாக்கிக் காப்பாற்ற வேண்டும்" என்றுகெஞ்சி கண்ணீர் வழியக் கேட்டுக்கொண்டான்.

அதே சமயம் ஸரஸாவும் ரத்தினப்ரபாவை மன்றாடி வேண்டிக்கொண்டு "எனக்கு அடைக்கலமும் ஆதரவும் கொடுத்த தாங்கள் இம்முறை அவரை மன்னித்து ரக்ஷிக்க வேண்டும். தங்கள்போன்ற பரிசுத்தாத்மாவிடம் பழகிப் பயன்பெற என்னுள்ளமும் மிகுந்த ஆசைப்படுகிறது தாயே! தயவு செய்ய வேண்டும்" என்று கெஞ்சினள்.

"எழுந்திருங்கள்! இதென்ன அதீதமான செய்கை. நான் ஒரு கேவலமான தாசி என்பதை மறந்துவிட்டீர்கள் போலும். இந்த சரணகதியை தேவி பராசக்தி அப்படியே அங்கீகரிப்பாளாக. சகலமும் அவளுடைய திருவடிகளுக்கே அர்ப்பணம். இனிமேல் இந்த நிமிஷம் முதல் உமது கடமையை விட்டுப் பிறழ்வதில்லை என்று ப்ரதிக்ஞை செய்துகொண்டு அம்பாளிடம் உமது ப்ரமாணத்தைத் தெரிவியும்.

---


# கொஹிமா, காபா

## பிரதேசங்கள்மேல் நமது வெடி விமானங்கள்

"...இன்று நமது ஆகாய விமானங்கள் விரோதி நாட்டின்மீது பறந்து ஆயிரக்கணக்கான பவுண்டு இடையுள்ள குண்டுகளைப்போட்டு விரோதியின் இடங்களையும், கோட்டைகளையும் துருப்புக்களையும் தகர்த்தன..."

இது உருவகமானதோர் அறிக்கை. இதனுள்தான் நமது இந்திய விமானிகளின் வீரச் செயகைகளும மறற வேலைகளின் சரித்திரமும் அடங்கியுள்ளன. நாம் அவர்களிடம வைததிருநத நமபிக்கையை அவர்கள் ருசுப்படுத்திவிட்டனர். ஆகாயத்திலும், பூமியிலும உலகிலேயே மோசமான சீதோஷ்ண ஸ்திதியிலும், பயங்கரமான நாடுகளிலும் அவர்கள் காண்பித்த வீரம், தீரம், பொறுமை இவைகளை நேரில் கண்டவர்களிடமும், அவர்கள் வேலைகளை அறிந்தவர்களிடமும் அவர்கள் புகழ்ச்சியைப் பெறறனர்.

இன்று அரக்கானிலும், பர்மாவிலும விரோதிகள் கைபபற்றிககொண்டிருககும நாடுகளின மீது, இந்திய ஆகாய படையின் சணடை விமானஙகளும, பருந்துபபாயசசல வெடிகுண்டு விமானஙகளும ரோகது விமானஙகளும முழு பலததுடன வேலை செய்கினறன



இந்திய விமானஙகள் கொஹிமா மீதும காபா மீதும ஆதிக்கம் வகித்து வந்தன. இன்று அவைகள பாமாமீது பறககினறன ஹரிக்கேன் விமானங்களும், வல்டி வெனஜெனஸ் விமானஙகளும ஜபபானியாகளுககு சாவையும நாசத்தையும் பொழிகினறன. இந்திய விமானிகளைபபறறி இந்தியா பெருமையடைகிறது.

ஜபபானியாகளைத் தோறகடிகக நமமால் முடியும்,

**தோற்கடித்து வருகிறோமென்பதை இவர்கள் மெய்ப்பிக்கிறார்கள்.**

தேசிய போாமுனையின பிரசுரம

AA 1308-AIM

Vol. 22. No. 3. Jaganmohini–Regd. No M. 2210.

எதிர்பாருங்கள்

# பாலர் மோகினி





பதிப்பாசிரியர்

வை. மு. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ.பி.எல்.

All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no reference whatsoever to real persons.
JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge : V. M. SRINIVASAN, M.A., B.L.